# வேத பாரதி செய்திகள்

VEDABHARATHI SEITHIGAL Tamil Monthly

தமிழ் மாத இதழ்

மலர் : 9 | இதழ் :1 | அக்டோபர் : 2024 | ரூ.20/-

Volume : 9 | Issue : 1 | October : 2024 | Rs.20/-



## வாசகர்களின் மேலான ஆதரவோடு




## ஆவது ஆண்டில்

# SHRI MAHA MERU MANDALI TRUST

81/1, Mannappa Street, Kottur, Chennai - 600 085.



2016 ம் ஆண்டு வேதபாரதி செய்திகள் பத்திரிகை கருப்பு வெள்ளையிலிருந்து மாற்றி வண்ண அட்டைப்படமும், அதிக பக்கங்களும் கொண்ட புத்தகமாக வெளிவர காரணமாயிருந்த சென்னை, கோட்டூர்புரம் **ஸ்ரீ மஹா மேரு மண்டலி குருஜி ஸ்ரீஸ்ரீஸ்ரீ பரிபூர்ணாம்பாள் சமேத மதுராம்பிகானந்த ப்ரஹ்மேந்த்ர ஸரஸ்வதி ஸ்வாமிகள்** கொடுத்த ஆதரவு வேதபாரதியின் வளர்ச்சிக்கு முக்கிய காரணமாகும். என்றென்றும் குருஜியின் பாதங்களுக்கு வேதபாரதியின் பணிவான நமஸ்காரங்கள்.

தினசரி கோட்டூர்புரம் மஹாமேரு மண்டலி அம்பாள் சன்னதியில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம் நடைபெறுகிறது. விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட எண்ணில் பதிவு செய்து பாராயணத்தில் கலந்துகொள்ளலாம்.

**Cell : 94440 60346**

# வேதபாரதி
## செய்திகள்



**காயத்ரீ தேவி**

**வியனுலகனைத்தையும் அமுதென நுகரும்**
**வேத வாழ்வினைக் கைப்பிடித்தோம்.** - மஹாகவி பாரதி

# அறிவோம் வேதம்

*இந்தப் பகுதியில் ஒவ்வொரு மாதமும் ஒரு வேதமந்திரமும் அதற்குண்டான பொருளும் வழங்கப்படும்.*

## வேதமந்திரம் - 63

**அந்யோப்$_{1}$யேவம் யோவித$_{3}$த்$_{4}$யாத்மமேவ**
**- கா$_{1}$ட$_{2}$கோ$_{1}$பநிஷத். (2.3-18)**

**பொருள் :** *ஒருவன் எப்படிப்பட்டவனாக இருந்தாலும் ஆத்மனை நசிகேதனைப் போல் உணர்த்தும் பிரம்மத்தை அடைந்தவனாகி பாவங்களிலிருந்து விடுதலையாகிறான்.*

*"யார் உணர்ந்தாலும் அவர் முக்தராகி விடுவார்" என்பதுதான் கடோபநிஷத் (காடகோபநிஷத்) சொல்லும் உண்மை.*

*நசிகேதன் யமனிடமிருந்து ஆத்ம தத்துவத்தை உணர்ந்து முக்தனானான். ஆத்மனை உணர்வதற்கு எல்லோருக்கும் பூர்ண ஸ்வதந்திரம் உண்டு.*

*//ஓம் சாந்தி: சாந்தி: சாந்தி://*

# வேதபாரதி செய்திகள்

(ஆன்மீக மாத இதழ்)

மலர்: 9 இதழ்: 1

அச்சிட்டு வெளியிடுபவர்
பதிப்பாளர், ஆசிரியர்

**ஆர்.வெங்கட்ராமன்**
27, F1 அன்னை இந்திரா நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.
செல்: 70101 88571

அச்சகம்
**சபாநாயகம் பிரிண்டர்ஸ்**
39, மில்லர்ஸ் சாலை, கீழ்ப்பாக்கம்,
சென்னை - 600 010.

REGD No : TN/CC(S) / DN / 571 / 24-26

RNI No : 1282188

Title Code : TNTAM/2016/73726

R.Dic.No.1845/2015

**VEDABHARATHI SEITHIGAL**

(Tamil Monthly Magazine)

Published on : 1-7th (1st Week) Every Month

TN/PM G (CCR) / WPP 605/24-26 /
Valid from 01.01.2024 to 31.12.2026

புத்தக வடிவமைப்பு :
**ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்**
நெ.17, பாரதிதெரு, இந்திராநகர்,
காமராஜபுரம், வேளச்சேரி,
செ - 42. போன்: 9025864231


## புத்தகத்தின் உள்ளே


| | |
|---|---|
| ஐப்பசி மாத விசேஷங்கள் | 6 |
| உங்கள் சிந்தனைக்கு | 13 |
| அட்டைப்பட விளக்கம் | 15 |
| ஸ்ரீமத் பகவத்கீதை | 27 |
| ஸ்ரீமத் பாகவதம் | 30 |
| ஆதிசங்கரர் | 33 |
| மூதுரை (ஔவையார்) | 36 |
| ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும் | 38 |
| மஹாபெரியவாளின் அற்புத விளக்கங்கள் | 43 |
| சிருங்கேரி மஹா சுவாமிகள் | 44 |
| தர்மத்தின் குரல் | 45 |
| பூக்களோடு பேசுவோம் | 49 |
| பெற்றோர்களே கவனியுங்கள் | 65 |
| இராமாயணம் தரும் படிப்பினை | 69 |
| சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில் | 75 |
| அயோத்தி குழந்தை ராமரின் அற்புத தரிசனம் | 77 |
| திரைகடல் ஓடி | 85 |
| தருவின் நிழலில் | 99 |



**சந்தா விவரம்**

வருட சந்தா ரூ.200
10 வருட சந்தா ரூ.1500

வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட

**VEDABHARATHI SEITHIGAL**
City Union Bank, Velachery Branch
A/c No. 510909010246740
IFSC : CIUB 0000262

நிர்வாக முகவரி:
எண்.31, சேஷாத்திரிபுரம்
1வது மெயின் ரோடு, பேபி நகர்,
வேளச்சேரி, சென்னை - 600 042.

**D. சூரியநாராயணன்**
**R. வெங்கட்ராமன்**
**K. சங்கர், S. ரகுநாத்**
**Cell : 94451 02193, 98402 01625**

Email:vedabharathichennai@gmail.com
Website: www.vedabharathi.org

# வேதபாரதி

(பாரதப் பண்பாட்டு அமைப்பு)

# "வேதபாரதி செய்திகள்"

# 11 ஆம் ஆண்டு




*பாரதப் பண்பாட்டு அமைப்பான* **"வேதபாரதி"** *யின் மாதாந்திர ஆன்மீக பத்திரிகையான* **"வேதபாரதி செய்திகள்"** *ஆரம்பித்து பத்து ஆண்டுகள் முடிந்து இந்த மாதம் (2024 அக்டோபர்)* **பதினொன்றாம் ஆண்டில்** *அடி எடுத்து வைக்கிறது. இத்தருணத்தில்* **"வேதபாரதி செய்திகள்''** *பத்திரிகையின் அன்பான சந்தாதாரர்களுக்கும், வாசகர்களுக்கும்,*

*பத்திரிகைக்கான செய்திகளை வடிவமைத்து தட்டச்சு செய்து கொடுக்கும் வேளச்சேரி,* **"ரெம்ஸ் டிஜிட்டல் பிரஸ்"** *நிறுவனத்திற்கும்.....*

*பத்திரிகையை புத்தகவடிவில் சிறப்பாக அச்சடித்து தரும்* **சென்னை சபாநாயகம் பிரிண்டர்ஸ்** *உரிமையாளர் அவர்களுக்கும், விளம்பரங்கள் மூலம் பேராதரவை அளித்துவரும் நிறுவனங்களுக்கும், பத்திரிகை மாதாமாதம் சிறப்பாக வெளிவர அயராது பாடுபடும் வேதபாரதி உறுப்பினர்களுக்கும்......*

வேதபாரதியின் அன்பான வாழ்த்துக்கள்

**ஆசிரியர், புத்தகக்குழு**

## குரோதி வருஷம் - ஐப்பசி மாத விசேஷங்கள்

**(அக்டோபர் 18.10.2024 முதல் நவம்பர் 15.11.2024 வரை)**

| | | | |
|---|---|---|---|
| *18.10.2024* | ஐப் *01* | வெள்ளி | துலா ஸ்நான ஆரம்பம் |
| *20.10.2024* | ஐப் *03* | ஞாயிறு | கார்த்திகை விரதம், சங்கடஹர சதுர்த்தி |
| *23.10.2024* | ஐப் *06* | புதன் | ஷஷ்டி |
| *28.10.2024* | ஐப் *11* | திங்கள் | ஏகாதசி |
| *29.10.2024* | ஐப் *12* | செவ்வாய் | ப்ரதோஷம் |
| *31.10.2024* | ஐப் *14* | வியாழன் | தீபாவளி பண்டிகை |
| *01.11.2024* | ஐப் *15* | வெள்ளி | அமாவாஸை, கேதார கௌரீ விரதம் |
| *02.11.2024* | ஐப் *16* | சனி | ஸ்கந்த ஷஷ்டி உற்சவ ஆரம்பம் |
| *03.11.2024* | ஐப் *17* | ஞாயிறு | அனுஷம் |
| *05.11.2024* | ஐப் *19* | செவ்வாய் | சதுர்த்தி |
| *07.11.2024* | ஐப் *21* | வியாழன் | ஸ்கந்த ஷஷ்டி, சூரசம்ஹாரம் |
| *12.11.2024* | ஐப் *26* | செவ்வாய் | ஏகாதசி |
| *13.11.2024* | ஐப் *27* | புதன் | ப்ரதோஷம் |
| *15.11.2024* | ஐப் *29* | வெள்ளி | பௌர்ணமி, அன்னாபிஷேகம் துலா ஸ்நான பூர்த்தி |

### 01.11.2024 வெள்ளிக்கிழமை - அமாவாஸை

குரோதி நாம ஸம்வத்ஸரே, தக்ஷிணாயனே சரத் ருதௌ, துலாமாஸே, க்ருஷ்ணபக்ஷே, அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ வாஸர : வாஸரஸ்து ப்ருகு வாஸர யுக்தாயாம் ஸ்வாதி நக்ஷத்ர யுக்தாயாம், விஷ்ணு யோக விஷ்ணு கரண ஏவம் குண ஸகல விஸேஷண விஸிஷ்டாயாம், அஸ்யாம், அமாவாஸ்யாயாம் புண்யதிதௌ.

## பூஜ்யஸ்ரீ நெரூர் ஸ்ரீவித்யா சங்கர சரஸ்வதி ஸ்வாமிகள் அருளுரை :

நாம் எல்லோரும் அனுக்ரஹம் பெற்றவர்கள். இந்த உலகத்தில் உள்ள அத்துணை பேர்களும் கடவுளின் குழந்தைகள். எல்லோரும் கடவுளை அடைய உரிமைப்பட்டவர்கள். நாம் எல்லோரும் அமிர்தஸ்ய புத்ரா:, அவருக்கும் நமக்கும் சம்பந்தம் என்றும் விடாது.

ஸ்வாமி பிள்ளை லோகாச்சார்யார் நவவித சம்பந்தம் என்று இதை அருளிச்செய்கிறார். அதேபோல் ஆண்டாள் நாச்சியார் உமக்கும் எனக்கும் இருக்கக்கூடிய உறவு ஒழிக்க முடியாது என்று பகவானிடம் கூறுகிறார்.

இப்போ சாமான்யமாக ஓர் புத்ரன் தன்னுடைய தகப்பனாரிடம் மனஸ்தாபத்தினால் பேசாமல் இருக்கலாம். அதற்காக அவன் புத்ரன் இல்லையென்றோ, அவர் சொத்தில் உரிமை இல்லை என்றோ சொல்ல முடியாது. அதேமாதிரி பகவானுடைய ஸாம்ராஜ்யம் அகண்டமான ஆனந்தம். அதற்கு நாம் எப்பொழுதும் உரிமை உடையவர்களே. பகவானுடைய எதிர்பார்ப்பும் நம்மிடம் அந்த உரிமையின் பிரதிபலிப்புதான். இதையே சாஸ்திரங்கள் அநேகப்பிரகாரமாக ஐக்ய கண்ட்யமாக ஒரே குரலாக கூறுகிறது. அதனால், என்ன தெரிந்துக்கணும் என்றால், அப்படி பகவானை அடையருத்துக்கும் பகவான் தர்மத்தின் ஸ்வருபம் என்று தெரிந்து கொள்வதற்கும் **வேதத்தை கதியாக வைத்துக் கொள்ள வேண்டும்.** ஏன் எனில் அது எப்படி இருக்க என்று அதுவே சொல்கிறது. "பிதேவ புத்ரம்". ஓர் அப்பா தன் பிள்ளைய எப்படி ரட்சிப்பாரோ அந்தமாதிரி ரக்ஷிகிறது வேதம்.

அதே நேரத்தில் கருணையுடன் இருப்பதால் வேதமாதா என்று சொல்கிறோம். அதனால் வேதத்தில் தர்மத்தின் சொரூபம் விசேஷமாக சொல்லப்பட்டதாக இருக்கு. நமக்கு பொதுவாக தர்மத்தை ஏன்

கடைப்பிடிக்க வேண்டும் / ஆஸ்ரயிக்க வேண்டும் என்ற கேள்வி எழும். தர்மத்தின் விதி நெருக்கம் இல்லாமல் இருந்தால் என்ன என்ற கேள்வி தோன்றும். இங்கே சிறிது ஆராய வேண்டும். எல்லோருக்கும் சுகமாக இருக்கணும் என்று தான் ஆசை. துக்கம் என்பது வரக்கூடாது என்று எல்லோருக்கும் ஆசை. ஆனால் நமக்குத் தெரியாமல் உடம்பிலும், மனசிலும் காரணம் இல்லாம தொந்தரவும் வருகிறது. சில விஷயங்களை நாமே யோசிப்போம். நமக்கு ஏன் இப்படி நேர்ந்தது என்று. இதுபோல் காரணம் புரியா விஷயங்களுக்கு வேதமே பதில் கூறுகிறது. கர்மவினை பூர்வஜென்மம் என்று சொல்கிறது.

ஒருவருக்கு சிறு பருவத்திலே சங்கீதத்தில் பெரிய ஞானம் ஏற்படுகிறது. சிலர் முன் ஜன்மத்தில் நடந்த விஷயங்களை ஞாபகப்படுத்தி சொல்வது, உண்மை என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதனால் பூர்வ ஜன்மம், அடுத்த ஜன்மம் இவைகளை ஒத்துக்கொண்டே ஆகவேண்டும். சாஸ்திரங்களில், எந்த எந்த கர்மங்களினால் எப்படி வினை பரிணாமம் அமையும் - பூர்வ ஜன்மத்தில் எப்படி இருந்ததால் இந்த ஜன்மத்தில் இப்படி அனுபவிக்கிறோம் என்று கணித்திருக்கிறது. தர்மத்தின் ஸ்வரூபத்தையும், அதை எப்படி அனுஷ்டிக்க வேண்டும் என்பதையும், எதை செய்தால் என்ன பலன் என்ற மூன்றையும் நமக்கு வேதமே சொல்கிறது. நமக்கு தெரியாத விஷயங்களை அதை தெரிந்த, நமக்கு நல்லது சிந்திப்பவர்களிடம் (ஆப்தர்கள்) கேட்டு தெரிந்து கொள்வது போல; வேதம் நமக்கு தெரியாத விஷயங்களை நமக்கு நன்மை பயக்கும் எண்ணத்துடன் விவரிக்கிறது. “ஆப்த வாக்யம் ப்ரமாணம்” (ஆபதர்கள் வசனமே சான்று) என்றநீதியை அனுசரித்து – வேதத்தை நாம் ஆதாரமாக கொண்டே தீரணும். இது நம் கடமை.

தொடரும்...

# வாழ்த்துரை



வேத தர்ம நெறியே பாரத நாட்டின் அச்சாணி எனலாம். பழக்க வழக்கங்கள், வழிபாடுகள், பண்பாட்டுச் செயல்பாடுகள், கலை மரபுகள், வாழ்வியல் முறைகள், இவ்வளவு என்ன, பேச்சு வழக்குகள் மற்றும் சொலவடைகள் என்று எல்லாவற்றிலுமே எங்கேயோ ஒருவகையில் தர்ம நெறியின் சாயலும் வேதக் கூறுகளும் இருப்பதைக் காணலாம்.

வேதங்கள் அநாதியானவை என்றாலும், வேதம் சார்ந்த பலவற்றை நம்முடைய முன்னோர்கள் காலங்காலமாகப் பழகி வந்துள்ளனர் என்றாலும், காலப் போக்கின் மாற்றங்களாலும், வாழ்க்கைச் சூழல் மாற்றங்களாலும், இவற்றையெல்லாம் இன்றைய தலைமுறைகள் மறந்துபோகும் நிலை ஏற்பட்டுள்ளது. "சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப்பழக்கம்" என்பாள் ஔவைப் பாட்டி. எதுவுமே பழக்கத்தில் இருக்கும்போது மட்டுமே நவீனமாகவும் பொலிவாகவும் இருக்கும். பயன்பாடு குறைந்தால் பொலிவு குறையும்.

இன்றைய தலைமுறையினருக்குப் பழமையின் பொலிவையும் பெருமையையும் எடுத்துரைக்கும் அரும்பணியை "வேதபாரதி" மாத இதழ் செவ்வனே செய்து வருகிறது. அதுவும் இனிய எளிய தமிழில் எடுத்துத் தருகிறது. பழந்தமிழ் நீதி நூல்களான மூதுரை போன்றவற்றின் பாடல்களை, மெல்ல மெல்லக் குழந்தைக்கு உணவூட்டும் தாய்போல் வாசகர்க்கு ஊட்டுகிறது.

இவ்விதழ் மேன்மேலும் மக்கள் பணியாற்றவும், தமிழ் மரபையும் பாரத மாண்பையும் பெருமிதப்படுத்தும் வகையில் மேன்மேலும் செயல்படவும், எங்கெங்கும் பேரொளியாக நிறைந்த பரமனிடம் பிரார்த்திக்கிறேன். எங்கெங்கும் நிறைந்த அப்பேரொளியின் பிரதிபலிப்புக் கூறாக என்றென்றும் இவ்விதழ் திகழ்வதாக!

**Dr. சுதா சேஷய்யன்**
துணைத்தலைவர்,
செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம்.

**Dr. K. NATARAJAN B.D.S.,**
REGN. No.218
**SANKARA HOSPITAL**

Ph : 0421-2240471
No.35, K.R.R. Lay-Out,
Mangalam Road,
Tirupur - 641 604.



*தேதி : 27.09.2024*

அன்புடையீர்,

வேதபாரதியின் எழுச்சி மிக்க வளர்ச்சி, மக்கள் மனதில் சிம்மாசனம் போட்டு, அழிக்க இயலாத ஒரு இடத்தை பிடித்துள்ளது என்ற உண்மை, எனக்கு ஆச்சர்யத்தையோ, வியப்பையோ ஏற்படுத்தவில்லை. கலாசாரம், நாகரீகம், பண்பு இவைகளை நயம்பட எடுத்துரைக்கும் மாபெரும் பாங்கு முதியவர்களை மட்டுமல்ல; இளைஞர்களையும் ஆட்கொண்டுவிட்டது. காஞ்சி பெரியவர், சிருங்கேரி சந்நிதானங்கள், நமது அனைவர் உள்ளங்களிலும் ஆழமாக ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி சுவாமிகளின் ஆசிகள் அனைத்தும் ஒன்று கூடி வேதபாரதியின் இன்றைய வளர்ச்சிக்கு துணை நிற்கிறது என்று சொன்னால் அது மிகையல்ல அல்லவா? இதுவே நமது பாக்கியம், இதுவே நமது பெருமையும் கூட.

இது மட்டுமா?

அற்புதமான எழுத்து சிற்பிகள், பார்த்து, பார்த்து செதுக்கும் கட்டுரைகள் பற்றி எவ்விதம் விவரிக்க!

வேதபாரதி அன்பர்களின் அளப்பரிய உழைப்பினால் வேதபாரதியின் வளர்ச்சி அதிவேகமாக உள்ளது என்று கூறவும் வேண்டுமோ?

எல்லா துறைகளிலும் ஈடு இணையில்லா புகழினை எட்டிவரும், வேதபாரதியின் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வருபவருமான எங்கள் திருப்பூரின் ஆடிட்டர் திரு.ராமனாதன் அவர்களின் ஒப்பற்ற சேவையை நினைவு கூறும் தக்க தருணம் இது என்று நான் எண்ணுகிறேன்.

வேதபாரதி மேன்மேலும் வளர எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்துக்கொள்கிறேன்.

**Dr. நடராஜன்,**

*தலைவர் ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம மண்டலி, திருப்பூர்*

## BEST WISHES TO VEDABHARATHI



My Humble Pranams at the Holy FEET of VEDA MATHA who is veritable the Life Breath of the SUPREME BEING.

The Vedic way of life has been the Hallmark of entire BHARATAVARSHA.

A common cultural thread joins the entire nation, irrespective of the various languages.

Countless Saints and Seers have enriched our Spiritual and Social worlds with their unflinching faith in the Vedic way of life.

Sanatana Dharma, whose foundations are Vedas and Shastras , is timeless . Whatever stands the test of time is TRUTH.

It is with these noble facts in mind, that Veda Bharati is doing yeomen service in a practical way, by involving children in the learning of VEDA, YOGA AND SHLOKA.

Today's children are tomorrow s assets. Adults are also drawn with enthusiasm.

Deep thoughts about our Dharma, as espoused by

JEEVAN MUKTAS, like Sri Mahaperiyava, Sri Mahasannidhanam of Sringeri, Poojyasri Paramananda Bharati Swamigal, light the lamp of

Gnana and Bhakthi in the hearts of the devout.

Elucidation of the meaning of our Puranas and Itihasas like Ramayana and Mahabharata, add Spiritual fervour.

Also, in addition, Timeless Tamizh Classics like Athichudi, Kondrai Vendhan, by AVVAIYAAR, Thirukkural by Thiruvalluvar are covered elaborately, to bring about the DEEP SPIRITUAL insights in them.

May God Bless the entire team, from the Editorial, managerial, printing, and other team members for such an elevating endeavor.

DHARMO RAKSHATHI, RAKSHITAHA

IF DHARMA IS PROTECTED IT PROTECTS US.

**Dr. V.S. Venkataraghavan**
Ashok Nagar, Chennai.

# ப்ரும்மஸ்ரீ முனீஸ்வர சாஸ்திரிகள், வேளச்சேரி



2013 ம் ஆண்டு முதல் வேதபாரதி நடத்தும் எல்லா நிகழ்வுகளிலும் தனது முழுமையான பங்களிப்புடன் ஆலோசனைகளையும் வழங்கி ஆதரவு அளித்து வரும் ப்ரும்மஸ்ரீ முனீஸ்வர மாமா அவர்கள் பாரதப்பிரதமர் சிறப்பு அழைப்பின் பேரில் அரசு விருந்தினராக டெல்லி சென்று புதிய மக்களவை வளாக திறப்பு விழாவில் கலந்து கொண்டு நமக்கு பெருமை சேர்த்தார்கள். மாமா மாமிக்கு பீமரதசாந்தி ஹோமம் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாமா மாமி எல்லா வளமும் நலமும் பெற்று வாழ மனதார வேதபாரதி குழுவினர் ப்ரார்த்தனை செய்கிறோம்.

**வேதபாரதி.**

ஸ்ரீ ஸ்ரீ முனீஸ்வர சாஸ்த்ரிகள் பூஸீர சக்ரவர்த்தி, விநயஸ்வபாவம், ஸதாசிரித்த முகம் அனைத்து ஐஸ்வர்யங்களும் அமையப்பெற்ற புண்ணிய ஆத்மா, உத்தமபுருஷர். இவருடன் பயணிப்பதில் பெருமை கொள்கிறோம்.

**ஸ்ரீ சந்த்ரசேகர சர்மா, பெங்களூர்.**

வேதபாரதியின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்த பெரியோர்களை கௌரவப்படுத்தும் விதமாக இந்தமாதம் முதல் தொடர்ந்து வேதபாரதியின் வேர்களை வணங்குகிறோம் என்ற தலைப்பில் வாசகர்களுக்கு அறிமுகப்படுத்துவதில் பெருமை கொள்கிறோம்.

**வேதபாரதி புத்தகக்குழு**

# உங்கள் சிந்தனைக்கு....

## 13. சைதன்யம்

*"கேவலம் சரீரத்தைக் குறித்தும், சரீரத்தின் மாற்றங்களைக் குறித்தும் மட்டும் பார்ப்பவர்கள்* **"மூடர்கள்"**, *மனதைக் குறித்தும் மனது சம்பந்தப்பட்டதை மட்டும் நினைப்பவர்கள்* **"ஞானிகள்"** *என்கிறார் பகவான். உயிருடன் இருக்கும் ஒரு சரீரத்தில்* **"மனது"** *இருக்கிறது. அந்த சரீரம் மரணம் அடைந்தால் அதில் மனது கிடையாது. அப்படியானால் உயிருடன் இருக்கும் ஒரு சரீரத்தில் யார் இந்த மனதை பிடித்து நிறுத்துவது?*

**"கேன உநிஷதம்"** *என்ற உபநிஷத்தில் முதல் ஸ்லோகத்தில் சிஷ்யன் கேட்கும் கேள்வி* **"கேனேஷிதம் பததி ப்ரேஷிதம் மன:"** *யாரால் இந்த மனது உணரப்படுகிறது? இங்கு மனதைப்பற்றிதான் கேள்வி கேட்கப்படுகிறது. சரீரத்தைப்பற்றியல்ல. அப்படியானால் மனதை பிடித்து நிறுத்துவது யார்? என்பதை நம் ரிஷிகள் கண்டுபிடித்தார்கள்.*

*கீதையில் 15ஆவது அத்தியாயத்தில் 15ஆவது ஸ்லோகத்தில் பகவான் அழகாக கூறுகிறார்.* **"ஸர்வஸ்ய ஹ்ருதி அஹம் ஸன்னிவிஷ்டோ"** = *எல்லோருடைய ஹிருதயத்திலும் அந்தர்யாமியாக இருக்கிறேன்.* **"மத்த ஸ்ம்ருதிர் ஞானம் அபோஹனம்"** = *என்னில்தான் ஞாபக சக்தியும் அறிவும் மறதியும் நிற்கிறது.*

*நாம் யாரையாவது பார்த்தால் "உங்களை எங்கேயோ பார்த்திருக்கிறேன். நன்றாக ஞாபகம் இல்லை" என்று கூறுகிறோம். அப்படி நாம் யோசிப்பது நம் சரீரத்தால் அல்ல, நம்முடைய மனதால்தான். இந்த ஞாபகசக்தி மறதி, அறிவு எல்லாம் என்னிடத்தில் தான் இருக்கிறது என்று பகவான் கூறுகிறார் என்றால்*

இவற்றை நம் மனதில் பிடித்து நிறுத்துவது பகவான்தான்.

'நான் யார்?' என்று பகவானே கீதையில் கூறுகிறார் **'அஹமாத்மா குடாகேச'** (கீதை 10-20). 'எல்லா உயிர்களின் உள்ளத்திலும் ஆத்மாவாக இருக்கிறேன்'. நான் யார் என்று கூறும்போது பகவான் தன்னை சங்கு சக்ரதாரி என்றோ, புல்லாங்குழல் ஊதுபவன் என்றோ, பசுவுடன் இருப்பவன் என்றோ கூறவில்லை. நான் எல்லோருடைய உள்ளேயும் ஆத்மாவாக இருக்கிறேன் என்கிறார். மீண்டும் 18-ஆம் அத்தியாயத்தில் 61-ஆவது ஸ்லோகத்தில் **'ஈஸ்வரன் ஸர்வபூதானி ஹ்ரத்தேசே திஷ்டதி'** ஈஸ்வரன் எல்லாருடைய ஹ்ருதயத்திலும் **'திஷ்டதி'** = நிற்கிறான்" என்கிறார்.

கோயில்களில் இருக்கும் சிலையை ஒரு சிற்பிதான் செதுக்குகிறான். அப்படி செதுக்கும்போது அவன் அந்த சிலையின் தலையில் கூட உட்காரவேண்டி வரும். அப்படி செதுக்கி அதை கோயிலில் கொண்டு வைத்தவுடன் அதை நாம் நமஸ்கரிப்பதில்லை. அந்த விக்ரஹத்தை பிராணப்பிரதிஷ்டை செய்து அதில் ஈஸ்வர சைதன்யத்தை ஆவாஹனம் செய்தபிறகு தான் அந்த சிலைக்கு **'சைதன்யம்'** ஏற்படுகிறது. ஆகையால் கோயிலில் நாம் நமஸ்கரிப்பது நம்மில் உள்ள சைதன்யத்தைத்தான்.

**D. சூரியநாராயணன்**

**வாசகர் கடிதம்**

வேதபாரதி புத்தகம் மிக நன்றாக உள்ளது. நான் ஸ்லோக வகுப்பும் படித்துவருகிறேன். மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

**ஐயப்பன்,** பெரம்பூர், சென்னை.

# அட்டைப்பட விளக்கம்
# “வேதபாரதி செய்திகள்”
## (பத்து ஆண்டுகளில் புத்தகத்தின் வளர்ச்சி)

*பாரதப் பண்பாட்டு அமைப்பான* **“வேதபாரதி”** *யின் பத்திரிகையான* **“வேதபாரதி செய்திகள்”** *ஆரம்பித்து பத்து வருடங்கள் முடிந்து இந்த மாதம் (அக்டோபர் 2024) 11ஆம் ஆண்டில் அடி எடுத்துவைக்கிறது. அதனுடைய* SYMBOLISM *தான் இந்த மாத அட்டைப்படம்.*

*06.07.2014 அன்று வேளச்சேரியில் நடந்த உறுப்பினர்கள் கூட்டத்தில், வேதபாரதி அமைப்பு நடத்தும் நிகழ்ச்சிகளின் விவரங்களையும், ஆன்மீக விஷயங்களையும் மக்களிடம் எடுத்துச் செல்வதற்கு வேதபாரதிக்காக ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்று ஏகமனதாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.*

*ஒரு பத்திரிகை ஆரம்பிக்க வேண்டுமானால் அதற்கு ஏராளமான நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். அதற்கு காலதாமதம் ஆகும் என்ற காரணத்தால் சிவாச்சார்யர்கள் நடத்தும்* **“ஸ்ரீ சுந்தரர் விஜயம்”** *என்கிற மாதாந்திர பத்திரிகையில் மாதா மாதம் ஆறு பக்கங்களில் வேதபாரதி செய்திகள் வெளியிடுவது என்று தீர்மானித்து அதன் ஆசிரியரை சந்தித்து அதற்கான அனுமதியைப் பெற்றோம்.*




*ஆகஸ்ட் 2014 முதல் செப்டம்பர் 2015 வரை 14 மாதங்கள் தொடர்ந்து* **“ஸ்ரீ சுந்தரர் விஜயம்”** *புத்தகத்தில் வேதபாரதி செய்திகள் வெளிவந்தன.*


வேத பாரதி
பெரியவர் பேசுகிறார்....

2014-ம் ஆண்டு ஆகஸ்ட் ஸ்ரீ சுந்தரர் விஜயம் இதழில் **"வேதபாரதி"** என்ற தலைப்பில் வேதபாரதி செய்திகள் வெளிவரத் துவங்கியது. முதல் இதழில் ஸ்ரீ மஹாபெரியவா, ஸ்ரீ ச்ருங்கேரி ஸ்ரீ ஆச்சார்யாள், பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள் ஆகியோரின் அருளுரைகளும், வேதபாரதியின் நோக்கங்களும் இடம் பெற்றன.

அதன் பிறகு 2015 அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கு தனியாகவே **"வேதபாரதி"** என்ற பெயரில் 6 பக்கங்களில் ஒரு சிறிய பத்திரிகையாக அச்சடித்து (பேப்பர் மாதிரி) வாசகர்களுக்கு இலவசமாக தபாலில் அனுப்பிக் கொண்டிருந்தோம்.


வேத பாரதி
VEDABHARATHI

இந்த இலவச புத்தகத்திற்கு நல்ல வரவேற்பு கிடைத்ததால் ஜனவரி 2016 முதல் செப்டம்பர் 2016 வரை (9 மாதங்கள்) 16 பக்கங்கள் கொண்ட சிறிய புத்தகமாக திருப்பூர் குமாரசாமி பிரிண்டர்ஸ் மூலம் அச்சடித்து இலவசமாக எல்லோருக்கும் வழங்கினோம். வெளியூர்களுக்கும் அனுப்பினோம்.

மாதா மாதம் 500 பிரதிகளுக்கும் மேல் அச்சடித்து இலவசமாக அனுப்புவதில் பணம் அதிகமாக செலவானதால் அதை ஈடுகட்ட புத்தகத்திற்கு விலை




நிர்ணயிக்கலாம் என்று உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவெடுத்து புத்தகத்திற்கு **“வேதபாரதி செய்திகள்”** என்று பெயர் சூட்டி, அட்டை படம் மட்டும் கலரில் அச்சடித்து ஒரு பிரதி ரூ.10/- என்றும் வருட சந்தா ரூ.100/- என்றும் ஆயுள் சந்தா ரூ.1500/- நிர்ணயித்து 30 பக்கங்கள் கொண்ட புத்தகமாக வெளியிட தீர்மானித்தோம். அதன்படி எல்லா வழிமுறைகளையும் கடைபிடித்து 2016 அக்டோபர் முதல் 30 பக்கங்கள் கொண்ட அழகிய புத்தகமாக வெளிவந்துகொண்டிருந்தது. வருடா வருடம் புத்தகத்தின் பக்கங்கள் அதிகமாகிக்கொண்டே இருக்கிறது.

**2014-ம் ஆண்டு “வேதபாரதி’’ என்கின்ற வித்திலிருந்து மாற்றான் தோட்டத்தில் முளைத்த “வேதபாரதி செய்திகள்” என்கிற சிறிய செடி இன்று நம்முடைய தோட்டத்தில் உயர்ந்த விருட்ஷமாக தழைத்து நிற்கிறது.**

புத்தகத்தின் இந்த வளர்ச்சிக்கு முக்கிய காரணம் புத்தகத்தின் ஆசிரியர் திரு.வெங்கட்ராமன் ஜி அவர்களின் விடா முயற்சியும், வேதபாரதி உறுப்பினர்களின் அயராத உழைப்பும், அன்பு வாசகர்களின் பேராதரவும் தான்.

**- புத்தகக்குழு.**

**Tirou S Carthic**

**✆ : 95855 02803**



SINCE 1985

# DHANALAKSHME TRADERS

*Decorative, Industrial Paints,*
*Speciality Coatings & Waterproofing*

*Authorised for*

apollo paints | Berger | BERGER PROTECTON PROTECTIVE COATING DIVISION | TOYO PAINTS



PREMIUM COATINGS | Zydex Innovating for Sustainability | INDIGO PAINTS

**No.1, 1st Cross, Thirumalai Thayar Nagar,**
**Moolakulam, Puducherry - 650 010.**

**✆ : 0413 - 2966674 / 98430 47774**

**✉ : dhanalakshmetraders@gmail.com**

ஜய ஜய சங்கர உ ஹர ஹர சங்கர
ஸ்ரீராமஜயம்


# ஸ்ரீ காஞ்சி சங்கர வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி,


நெ.1, விஜித்ராயர் தெரு, மயிலாடுதுறை - 609 001.

## எங்கள் பள்ளியின் சிறப்பு அம்சங்கள்




- ஹிந்தி, சமஸ்கிருதம்
- கணினி
- ஸ்லோகம் வகுப்புகள்
- காற்றோட்டமான வகுப்பறைகள்
- சுகாதார வசதி
- அறிவியல் ஆய்வகங்கள்
- மாணவர்கள் நன்கு விளையாட விசாலமான மைதானம்
- யோகா பயிற்சி வகுப்புகள்
- கற்பித்தலில் புதிய அணுகுமுறை
- மாணவர்களின் முழு வளர்ச்சியில் தனி கவனம்.





போன் : 04364 - 240567 | செல் : 74027 77569


91591 50333
80980 08555
97872 79279
SUPERGAS™
PADMAAS & CO
No.100, 1st Cross, Nanbargal Nagar,
Puducherry - 605 010.
Authorised Francisee of
SHV Energy Private Limited


Cell : 97872 79279
PADMAAS
CATERING PVT. LTD.,
Sivagami Nagar, Reddiarpalayam,
Puducherry - 605 010.
padmaascatering@gmail.com

# வேதபாரதியின் வேர்களை வணங்கி மகிழ்கிறோம்

## ஸ்ரீ D. சூர்யநாராயணன் - ஸ்ரீமதி செல்லம்மாள்



தனது பள்ளிப் படிப்பை முடித்து தட்டச்சராக பணியை துவக்கி பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ், மற்றும் விற்பனை வரி அலுவலகத்தில் CTO ஆக பணிபுரிந்தவர்கள். எதையும் சரியாகவும், துல்லியமாகவும் செயலாற்றும் வேதபாரதியின் மூத்த உறுப்பினர்.

**மாமி - திருமதி. செல்லம்மாள்**

தமிழ் ஆசிரியை, எழுத்தாளர், தமிழ்புலமை பெற்றவர்

மாமியும், மாமாவும் பிரதிவருடம் நவராத்திரியில் புதிய கற்பனையில் பல்வேறு கோவில்களை மினியேச்சர் முறையில் வடிவமைத்து பல மாதங்கள் முயற்சி செய்து விசேஷமான கொலு வைத்து பல்வேறு ஸ்தாபனங்கள் மூலம் பரிசுகளை அள்ளிக் குவித்தவர்கள். நவராத்திரி கொலு போட்டி மூலமாக வேதபாரதியில் அறிமுகம் ஆகி 2014-ல் ஏகதின அதிருத்ரத்தில் ஆதிசங்கரர் வாழ்க்கை வரலாற்றை கண்காட்சியாக வைத்து எல்லோர் கவனத்தையும் ஈர்த்தவர்கள்.

இன்றும் ஆதிசங்கரர் சிலாரூபம் ஊரப்பாக்கம் சங்கர வித்யாலயாவில் காட்சி தருகிறது. 2014 முதல் வேதபாரதியின் எல்லா முக்கிய நிகழ்வுகளிலும், ஆலோசனை வழங்கி, நல்வழி காட்டி வருகிறார்கள். வேதபாரதி புத்தக ஆரம்பநாள் முதல் 11 வருடங்கள் மாமாவின் வழிகாட்டுதலில் வீறுநடை போட்டு வருகிறது. வேதபாரதி குழுவினரின் நமஸ்காரங்கள்.

## ஸ்ரீ லலித்குமார் - ஸ்ரீமதி தனலட்சுமி

குரோம்பேட்டை.



ஸ்ரீ லலித்குமார் அவர்கள் 1943 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் வடாற்காடு மாவட்டத்தில் கலவையில் பிறந்துள்ளார்கள். M.Sc., Physics (MIIM) துப்பாக்கி தொழிற்சாலையில் அரசுப்பணியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்கள்.

ஸ்ரீமதி தனலட்சுமி வருமானவரித்துறை அலுவலகத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்கள்.

தம்பதியர் வேதபாரதியின் செயல்களுக்கு மிகவும் உறுதுணையாக வாழ்ந்துகொண்டுள்ளார்கள். பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகளை தங்கள் இல்லத்தில் தங்க வைத்து அருளாசி பெற்றவர்கள். ஸதாபிஷேகம் கண்ட தம்பதியரை வேதபாரதி வணங்கி மகிழ்கிறது.

---

## ஸ்ரீ H. நாராயணஐயர் - ஸ்ரீமதி பங்கஜம் மாமி

வேளச்சேரி



ஸ்ரீ H.நாராயண ஐயர் அவர்கள் ஓய்வு பெற்ற ஆசிரியர். 3 மகள்கள் 1 மகன் ஆதர்ஷ தம்பதியர்கள். ஸதாபிஷேகம் கண்ட நற்பெருமக்கள். வேதபாரதியின் லலிதா ஸஹஸ்ரநாம பூஜைக்கு தன்னலம் பாராமல் தொடர்ந்து உதவி செய்தவர்கள். வேதபாரதி புத்தகத்தின் 11-ம் ஆண்டில் நன்றியுடன் நினைத்து மகிழ்கின்றோம்.

## ஸ்ரீ ராமதாஸ், ஆதம்பாக்கம்



கல்வி – M.Sc., Retd., from NIC, Delhi

Strong devotee of Sri Paramanandha Bharathi Swamigal

Wife : Mrs. Visalatchi

கல்வியாளர் – Retd., Teacher

சுவாமிஜியுடன் டெல்லியில் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தி ஸ்வாமிஜியின் பரிபூரண அருள் பெற்றவர். வேதபாரதியில் 2012 முதல் சுவாமிஜியின் நிகழ்வுகளில் பங்குபெற்று ஆதரவு நல்கியவர். ஏகதின அதிருத்ரத்தில் அரும்பணியாற்றிவர். வேதபாரதி தம்பதியினரை வணங்கி மகிழ்கிறது.

---

## ஸ்ரீ சௌம்ய நாராயணன்,

B.Sc., CAIIB (Retd., Chief Managar, Bank of India, Coimbatore)

## ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி



36 ஆண்டுகால வங்கிப்பணி, சிறுவயது முதல் RSS-ல் சேர்ந்து தேச சேவை, 1964 முதல் சுவாமி பரமானந்த பாரதி சுவாமிகளுடன் பரிச்சயமாகி ஸ்வாமிகளுடன் எல்லா நிகழ்வுகளிலும் பங்கு பெற்றவர். சுவாமிஜியின் வேதாந்த ப்ரபோதம் புத்தகம் தமிழில் வெளிவர காரணமாக இருந்தவர். ஸ்ரீ சௌம்ய நாராயணன் ஜி நம்மிடம் வேதபாரதியின் செயல்களில் தற்போது இல்லை என்றாலும் அவரால் உருவாக்கப்பட்ட ஸ்வாமிஜியின் செயல்கள்யாவும் தொடர்ந்து நடைபெறும். ஸ்ரீ சௌம்ய நாராயணனின் குழந்தைகளும் குடும்பத்தாரும் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.

## ஸ்ரீ பாலகிருஷ்ணன் - ஸ்ரீமதி வசந்தா

நங்கநல்லூர்



பாரத ஸ்டேட் வங்கியில் 40 ஆண்டு கால சிறந்த பணி, ஆந்திரா, கர்நாடகா, தமிழ்நாட்டில் பணி புரிந்துள்ளார்கள். அலுவல் பணியாக காஷ்மீர் வரை பயணம் செய்துள்ளார்கள். தனது ஓய்வு காலத்தில் ஆருத்ரா எனும் பெயரில் ருத்ர கமிட்டி அமைத்து 12 ஜோதிர் லிங்கம், பஞ்சபூத ஸ்தலங்கள் சென்று தனது குழுவிற்கு பெறும் புண்ணியம் சேர்த்தவர்கள். பாரம்பரிய பண்பாட்டுடன் வாழ்ந்து வரும் மிக நல்ல குடும்பத்தினர். நல்ல ஆலோசகர். வேதபாரதியின் ஏகதின அதிருத்ரத்தில் வெகு சிறப்பாக பணிபுரிந்து ஒத்துழைப்பு நல்கியவர். மாமா - மாமிக்கு வேதபாரதியின் நமஸ்காரங்கள்.

---

## ஸ்ரீ நடராஜன் - ஸ்ரீமதி கலைமணி

வேளச்சேரி



புகழ்பெற்ற சென்னை, ஐஐடியில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். டெல்லி மற்றும் தமிழ்நாட்டில் பணிபுரிந்தவர். வேதபாரதியின் ஸ்ரீ லலிதா ஸகஸ்ரநாம பாராயண குழுவில் ஆரம்பம் முதல் பங்களித்து மிகுந்த ஒத்துழைப்பு நல்கியவர்கள். வேதபாரதி புத்தக குழுவிலும் இடம்பெற்று, புத்தகம் வெளிவர தங்கள் மேலான ஆதரவை நல்கியவர்கள். வேதபாரதியின் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு நல்கிய ஸ்ரீ நடராஜன் மாமா - மாமிக்கு எங்கள் நமஸ்காரங்கள்.

## ஸ்ரீ வெங்கட்ராயர் – ஸ்ரீமதி. சுப்புலக்ஷ்மி

மடிப்பாக்கம்



வேதபாரதியின் ஆரம்பகால உறுப்பினர், வழிகாட்டி. சுவாமிஜியுடன் பல ஆண்டுகளுக்கு முன்பே சென்னையில் சுவாமிஜியின் நிகழ்ச்சிகளை டெலிபோன் நாராயணசாமி அவர்களுடன் நடத்தியவர்கள். தங்கள் இல்லத்தில் பூஜ்யஸ்ரீ பரமானந்தபாரதி சுவாமிகளை தங்க வைத்து பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு 1984 முதல் சுவாமிஜியுடன் பரிச்சயத்தில் இருந்தவர். மாமா, மாமி இருவரும் பொதுப்பணித்துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். எல்லா நலமும் பெற்றுவாழ ஸ்வாமிஜியை ப்ரார்த்திக்கிறோம்.

---

## டாக்டர் ஸ்ரீ ராமதாஸ் - ஸ்ரீமதி மங்களம்



வேளச்சேரி டாக்டர் ஸ்ரீராமதாஸ், தஞ்சைமாவட்டம், ஆன தாண்டவபுரம், ஸ்ரீமதி மங்களம் மாமி, நாகை மாவட்டம் புலியூர் பூர்வீகமாக கொண்டவர்கள். ஸ்ரீ ராமதாஸ் அவர்கள் தமிழிலும், சமஸ்க்ருதத்திலும் பல பட்டங்களை பெற்று தமிழாசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றவர். வேதபாரதியின் 2014ம் ஆண்டு வேளச்சேரியில் முதன்முதலாக திருப்பாவை, திருவெம்பாவை போட்டிகள் நடத்தி குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கி வேதபாரதியின் பாவை விழா இன்னும் தொடர்ந்து நடத்த முக்கிய காரணமானவர். மாமா இன்று நம்மிடம் இல்லாவிட்டாலும் இன்றும் மாமாவின் குடும்பத்தினர் வேதபாரதிக்கு ஆதரவு அளித்து வருகிறார்கள். ஸ்ரீராமதாஸ் மாமாவின் குடும்பத்தினர்கள் வாழையடி வாழையாக வாழ வேதபாரதி ப்ரார்த்திக்கிறது.

## ராம்ராம் ஸ்ரீ சுந்தரராமன் ஜனகல்யாண்



வேதபாரதி அமைப்பு மிகுந்த மரியாதை வைத்துள்ள ஓர் வாழ்நாள் சாதனையாளர், ஸ்ரீ ராம் ராம் சுந்தரராமன் ஜி 1999-ல் மேதகு தமிழக ஆளுநர் அவர்களால் Life Time Achievement Award பெற்றவர்.

ராஷ்ட்ரிய ஸ்வயம் சேவக் - 63 ஆண்டுகள் பயணம்

தனது பெரிய நல் உள்ளத்தால் 82 முறைரத்தம் தானம் கொடுத்தவர்.

அயோத்யா ராமர் கோவில் - நிகழ்விற்கு கரசேவை செய்ததற்கு உத்திரபிரதேச அரசாங்கத்தில் ஜெயில் வாசம்.

ஜனகல்யாண் தலைவராக 35 ஆண்டுகள் காஞ்சி மடத்தின் அணுக்கத் தொண்டராக குரு விஸ்வாசம்.

33 ஆண்டுகள் MMTC மத்திய அரசுப்பணி.

நிர்வாக அதிகாரியாக ஸ்ரீ சங்கர வித்யாலயா கிழக்கு தாம்பரத்தில் 2000 முதல் பணி செய்துவருபவர்.

ஆஷாட ஏகாதசி சிறப்பு நடை பயணம் பண்டரீபுரத்திற்கு யாத்திரை அதிகாரியாக 100 பேருடன் 48 நாட்கள்.

23 ஆண்டுகள் காஞ்சி மடம் இந்து சமய மன்றம் மூலமாக திருத்தல தரிசனம்

ஸ்ரீஸ்ரீஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் தாயார் வம்சாவழி கொள்ளுப்பேரன்.

தேசபக்தியும், தெய்வபக்தியும் கொண்டு வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்து வரும் எங்கள் அன்புச் சகோதரர், வழிகாட்டி, பரோபகாரி ஸ்ரீமான் ராம் ராம் சுந்தரராமன் தம்பதியர் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ வேண்டுகிறோம்.

**வேதபாரதி**

ஓம் நமோ பகவதே வாஸுதேவாய,
ஓம் நமோ நாராயணாய.

# ஸ்ரீமத் பகவத்கீதை

D. சூரியநாராயணன் பகுதி - 65

**ஸஹாயோ ஜாயதே சீக்ரம் யத்ர கீதா ப்ரவர்ததே/**
**யத்ர கீதாவிசாரஸ்ச படனம் பாடனம் ச்ருதம்/**
**தத்ராஹம் நிஸ்சிதம் ப்ருத்வி நிவஸாமி ஸதைவ ஹி//**

**பொருள் :** *எங்கு கீதை வாசிக்கப்படுகிறதோ அங்கு சீக்கிரம் சஹாயம் வருகிறது. எங்கு கீதை ஆராய்ச்சி செய்யப்படுகிறதோ, ஓதப்படுகிறேதா, புகட்டவும் கேட்கவும் செய்யப்படுகிறதோ, ஆங்கு நிலமகளே கேள், நான் நிச்சயமாக ஸதா வாசம் செய்கிறேன்.*

## அத்தியாயம் – 3
## கர்ம யோகம்

*ஸ்லோகங்கள் 20 முதல் 29 வரையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் அர்ஜுனனுக்கு "லோக ஸங்க்ரம்" (உலக நலனுக்காக செயலாற்றுதல்) என்பதைப்பற்றி உபதேசிக்கிறார். அதாவது சாஸ்திரம் சொன்னபடி தங்கள் கர்மாக்களை ஒழுங்காக செய்து ஞானம் பெற்றவர்கள் பற்றி பகவான் கூறுகிறார்.*

**கர்மணைவ ஹி ஸம்ஸித்$_3$தி$_4$மாஸ்தி$_2$தா ஜனகாத$_3$ய:/**
**லோகஸங்க்$_3$ரஹமேவாபி ஸம்பச்யன்கர்துமர்ஹஸி//**
**(கீதை 3-20)**

**பொருள் :** *ஜனகர் முதலியவர்கள் கர்மத்தாலேயே முக்தி அடைந்தார்கள். உலகத்தை நல்வழியில் நடத்துதலை நன்குணர்ந்தாவது கர்மஞ் செய்யக் கடப்பாடுடைத்திரு. சீதாதேவியின் தந்தையான ஜனகர் ஒரு சிறந்த ஞானி. அவர் துறவு மேற்கொள்ளாமல், துறவு புத்தியுடன் இல்லத்தில்*

இருந்துகொண்டே தனது க்ஷத்ரிய தர்மமான அரசாள்வதை செவ்வனே செய்துகொண்டு ஜீவன் முக்தராக வாழ்ந்தார்.

அவர் கொண்டிருந்த ஸன்யாஸ புத்திக்கு எடுத்துக்காட்டாக ஒரு கதையுண்டு.

ஒரு சமயம் ஜனகர் தன் குரு யாக்ஞயவல்க்யரின் ஆஸ்ரமத்தில் மற்றசீடர்களுடன் உபநிஷத் பாடம் கேட்டுக்கொண்டிருந்தார். அப்போது ஒரு அதிர்ச்சி செய்தி வந்தது. அதாவது **"தலைநகர் மிதிலையும் அரண்மனையும் தீப்பிடித்து எரிகிறது"** என்ற செய்தி. இதைக் கேட்டதும் அங்கு பாடம் கேட்டுக்கொண்டிருந்த சீடர்கள் தங்களையும் தங்கள் உடமைகளையும் பாதுகாத்துக் கொள்ள நினைத்து பதற்றத்துடன் ஓடினார்கள். ஆனால் ஜனகர் எவ்வித சலனமுமின்றி குருவிடம் பாடம் பயின்று கொண்டிருந்தார்.

தீப்பிடித்த செய்தி உண்மையல்ல என்பதை நேரில் கண்டு உணர்ந்த சிஷ்யர்கள் மீண்டும் ஆஸ்ரமம் திரும்பி வந்தார்கள். அப்போது ஜனகர் எவ்வித சலனமுமின்றி குருவிடம் பாடம் பயின்றுகொண்டிருந்ததைக் கண்டு "ஜனகரால் மட்டும் எவ்வாறு இப்படி இருக்க முடிகிறது? என்பதை அறிய விரும்பி அவரிடமே கேட்டார்கள்.

ஜனகர் அவர்களுக்கு பதில் கூறாமல் அவர்களுக்கு ஒரு விருந்து ஏற்பாடு செய்தார். அறுசுவை உணவு தங்கத் தட்டுக்களில் பரிமாறப்பட்டிருந்தது. அதே நேரம் ஒவ்வொருவருடைய தலைக்கு மேல் ஒரு கூரான வாள் மெல்லிய நூலில் கட்டி தொங்கவிடப்பட்டு ஆடிக்கொண்டிருந்தது. அதைக்கண்ட விருந்தினர்கள் அனைவரும் மிகவும்

பீதியுடன் வாளிலேயே முழு கவனத்தோடு உணவருந்தினார்கள். விருந்து முடிந்ததும் ஜனகர் அவர்களிடம் “விருந்து எப்படி இருந்தது?” என்று கேட்டார். அதற்கு அனைவரும் “யாருக்குத் தெரியும்? எங்கள் கவனமெல்லாம் வாளில் அல்லவா இருந்தது” என்று பதில் அளித்தனர். அப்பொழுது ஜனகர் “எப்படி உங்களுக்கு கத்தியில் கவனமிருந்ததால் உத்தமமான உணவு அருந்திய போதும் அதில் மனம் ஈடுபடவில்லையோ அதுபோல் ஒவ்வொரு கணமும் ப்ரஹ்மத்தில் லயித்திருப்பதால் நான் உலகில் எவ்வளவு அரசுப் பணிகளிலிலும் இதர லௌகீக விஷயங்களிலும் ஈடுபட்டிருந்தாலும் அவை என்னை பாதிப்பதில்லை” என்று பதில் அளித்தார்.

வேதங்களில் சொல்லியுள்ளதுபோல் ஆசாபாசமில்லாமல் கர்மங்களைச் செய்துவந்தால் நம்முடைய புத்தி நன்கு செயல்படும். அதனால் மனம் ஒருநிலைக்கு வரும், அதனால் ஆத்ம ஞானம் வெகு சுலபமாக கிடைக்கும். அப்படி ஆத்ம ஞானம் வந்தபிறகும் ஸ்வார்த்தமில்லாமல் உலக க்ஷேமத்திற்காக கர்மாக்களை செய்யவேண்டும். இது மேலும் ஒருவனை தூய்மையாக்கி மோக்ஷத்தைத் தரும் என்ற சத்தியத்தை இந்த ஸ்லோகம் விளக்குகிறது.

தொடரும்.....

## வாழ்த்துகிறோம்

ஸ்ரீ நடராஜன் மாமா திருநெல்வேலி, ஸ்ரீமான் மணி வாத்தியார் ஸ்ரீ ருத்ர கமிட்டி சார்பாக ஸ்ரீ அழியாபதீஸ்வரர் கோவிலில் மஹாருத்ரம் சிறப்பாக நடத்திக் கொடுத்தார்கள். வேதபாரதி சிறப்பிதழுக்கும் ரூ.500/- நன்கொடை வழங்கி சிறப்பித்தார்கள். வேதபாரதியின் மனமார்ந்த நன்றி.

# ஸ்ரீமத் பாகவதம்

*(ஸத்யம் பரம் தீமஹி)*

பரிதி பகுதி - 43

## ஸ்கந்தம் 4

### ப்ராசீனபர்ஹிஸ் மற்றும் ருத்ரகீதம்

**(ஸ்கந்தம் 4 – அத்தியாயங்கள் 24 முதல் 31 வரை)**

**“ப்ருது”** சக்ரவர்த்திக்குப் பின் அவருடைய கொள்ளுப் பேரன் **“ப்ராசீனபர்ஹிஸ்”** என்றஅரசன் தர்மத்தை அனுஷ்டித்து ஆட்சி செய்துவந்தான். அவனுடைய மனைவியின் பெயர் **“சதத்ருதி”.** இவர்களுக்கு பகவான் கருணையால் பத்து புதல்வர்கள் பிறந்தார்கள். அவர்கள் **“பிரசேதஸர்கள்”** என்று அழைக்கப்பட்டார்கள்.

ஒரு நாள் **“ப்ராசீனபர்ஹிஸ்”** தன் பத்து பிள்ளைகளையும் அழைத்து “நீங்கள் எல்லோரும் மக்களைப் பெற்று வம்சத்தைப் பெருக்குங்கள்” என்று கட்டளையிட்டார்.

பிதாவின் ஆணையைப் பணிவுடன் ஏற்றபிரசேதஸுக்கள் இல்லறத்தைத் தொடங்கும் முன் பகவானை தரிசித்து ஆசி பெறஆசைபட்டார்கள். அதற்காக ஒரு சிறந்த இடத்தை தேடிக்கொண்டு புறப்பட்டார்கள். ஒரு இடத்தில் அவர்கள் தூய்மையான நீர் நிறைந்த ரம்யமான ஒரு ஏரியைக் கண்டார்கள். அப்போது அந்த ஏரியிலிருந்து ஸ்ரீருத்ர பகவான் வெளியே வந்தார்.

அவரைக் கண்டதும் பிரசேதஸுக்கள் ருத்ரனின் திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்தார்கள்.

ருத்ரன் அவர்களைப் பார்த்து “நீங்கள் பர்ஹிஷதனின் புதல்வர்கள்தானே!. நீங்கள் ஹரியின் பக்தர்கள் என்பதை நான் அறிவேன். நீங்கள் எனக்கு

மிகவும் பிரியமானவர்கள். இப்போது பவித்ரமானதும், முக்தியளிக்கக் கூடியதுமான ஒரு ஸ்தோத்திரத்தை உங்களுக்கு உபதேசம் செய்கிறேன். இந்த ஸ்தோத்திரத்தை ஜபிப்பவன் முடிவில் சம்சார பந்தங்களிலிருந்து விடுபட்டு தியானம் பண்ணி கர்ம பந்தங்களிலிருந்து விடுபடுகிறான்.

அதை நீங்கள் ஒன்று பட்ட மனத்துடன் தனிமையில் ஜபம் செய்துவாருங்கள் என்று சொல்லி ப்ரும்ம தத்துவத்தை விளக்கும் நாற்பத்தி ஏழு ஸ்லோகங்களை ப்ரசேதஸர்களுக்கு உபதேசம் செய்துவிட்டு ருத்ரன் மீண்டும் தவம் செய்ய நீரினுள் சென்றுவிட்டார்.

பிரசேதஸர்கள் ருத்திரனால் உபதேசிக்கப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை பல ஆயிரம் ஆண்டுகள் நீரில் நின்றபடி தூய மனத்துடன் பகவான் ஸ்ரீவிஷ்ணுவை நினைத்து இடைவிடாமல் ஜெபித்து வந்தார்கள். அவர்களுடைய உறுதியான பக்தியைக் கண்டு மகிழ்ந்த பகவான் மஹாவிஷ்ணு கருடன் மீதேறி வந்து அவர்களுக்குக் காட்சி கொடுத்தார்.

(பகவான் **“ருத்ரன்”** பிரசேதஸுக்களுக்கு செய்த உபதேசம் ஸ்ரீமத் பாகவதத்தில் 4ஆவது ஸ்கந்தத்தில், 24ஆவது அத்தியாயத்தில் ஸ்லோகங்கள் 27 – 31 மற்றும் 34 – 36 இல் உள்ளன)

பரமேஸ்வரன் (ருத்திரன்) பரமபிதாவான விஷ்ணுமீது பாடியதால் இந்த ஸ்தோத்திரங்கள் **“ருத்ர கீதை”** என்றும் **“ருத்ர கீதம்”** என்றும் **“ஏகாதச ஸ்தோத்ரம்”** என்று அழைக்கப்படுகிறது.

இந்த **“ருத்ரகீதம்”** ஸ்ரீமத் பாகவதத்தில் ஸ்கந்தம் 4ல் அத்தியாயம் 24ல் ஸ்லோகம் 33 முதல் 68 வரை வருகிறது.

(பி.கு. = பகவான் பரமேஸ்வரன் (ருத்திரன்) தபசு செய்ததும், பிரசேதஸுக்களால் கண்டதுமான அந்த புனிதமான ஏரி தற்போதும் தென்னகத்தில் ஒரு ஊரில் இருக்கிறது. ஆனால் அது ஏரியாக அல்ல ஒரு தெய்வீக குளமாக. அது எந்த ஊர் என்று வாசகர்கள் அறியவிரும்பினால் இந்த மாதம் முதல் அடியேன் எழுத ஆரம்பித்துள்ள புதிய கட்டுரையை தொடர்ந்து படித்தால் தெரியும்).


ஸ்ரீமத் பாகவதம் தொடரும்...




We Undertake
Marriage Hall Decorations
Theme & Decorations
Car & Room Decorations
Balloon Decorations
Wedding Garlands
Flower Bouquents
Flower Arrangements
Flex Printing

Velu Prop
Velu Decoration
For Contact
9047226522 9843882655
8838710131 6380129005

எங்களிடம்
திருமண மண மேடை
கார், ரூம் அலங்காரம்
பலூன் டெக்ரேசன்
திருமண மாலை
மற்றும்
ப்ளக்ஸ் பிரிண்டிங்
குறித்த நேரத்தில்
சிறப்பாக செய்து தரப்படும்.




Owned, Published and Printed by **R. VENKATARAMAN,** Printed at **SABANAYAGAM PRINTERS,** 39,Millers Road, Kilpauk, Chennai - 600010 and Published at 27, F1, Annai Indira Nagar, Velachery, Chennai - 600042.
Editor : **R. VENKATARAMAN, 9443495950**

அத்வைத ஆசான்

# ஸ்ரீ ஆதிசங்கரர்

ஆதவன் | அத்தியாயம் — 13 | பகுதி 35

## அத்தியாயம் 2
## (பத்மபாதரும் காபாலிகரும்)

ஸ்ரீசங்கரர் ஸ்ரீசிவானந்தலஹரியை இயற்றிய பிறகு ஸ்ரீசைலத்தில் தங்கியிருந்தார். அதை அறிந்த பற்பல சமயவாதிகள் ஸ்ரீசங்கரரை பார்க்க வந்தார்கள். அவர்களில் சைவம், சாக்தம், பாசுபதம், வீராசாரம், காபாலிகம், மாஹேஸ்வரம் போன்றபல பிரிவுகள் இருந்தன.

இவர்களில் காபாலிகர்கள் பிறமதங்களை வெறுப்பவர்களாக இருந்தார்கள். அவர்களில் ஒரு சிலர் குழுவாக வந்து ஸ்ரீசங்கரரிடம் வாதாட முயன்றார்கள். ஆனால் ஸுரேச்வரர், பத்மபாதர் போன்றசிஷ்யர்களே இந்தக் குழுவினரை ஸ்ரீசங்கரரிடம் அணுகவிடாமல் அவர்களிடம் வாதம் செய்து விரட்டிவிட்டனர்.

ஸ்ரீசங்கரர் அவரை நாடிவரும் மக்களுக்கு தியாகம், சத்தியம், தயை, சாந்தி, பக்தி, புலனடக்கம், அறம் பிறழாமல் இல்லறம் நடத்துதல் போன்றவற்றைபோதித்தார். இதனால் ஸ்ரீசங்கரரின் புகழும் பெருமையும் ஊரெங்கும் பரவியது. இதனால் ஒரு சில காபாலிகர்கள் ஸ்ரீசங்கரரின் வழிமுறைக்கு மாறிவட்டார்கள்.

இது சில காபாலிக தலைவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்களுக்கு தலைவனாக இருந்த **“க்ரகசபைரவன்”** என்றகாபாலிகன் தன் சீடர்களுடன் கலந்து ஆலோசித்து ஸ்ரீசங்கரரை வதம்செய்ய சதி திட்டம் தீட்டினான். ஸ்ரீசங்கரரை வதம் செய்ய

**“உக்ரபைரவன்”** என்ற காபாலிகனிடம் பொறுப்பை ஒப்படைத்தான்.

ஒரு நாள் **“உக்ரபைரவன்”** ஸ்ரீசங்கரரிடம் வந்து அவரை நமஸ்கரித்து “நான் உங்கள் அருளை விரும்புகிறேன். எனக்குள் ஒரு ஆசை அதை தாங்கள்தான் நிறைவேற்றவேண்டும்'' என்றான். அதற்கு ஸ்ரீசங்கரர் “நம்மால் முடிந்தவற்றைச் செய்வோம்'' என்றார்.

அதைக்கேட்ட **“உக்ரபைரவன்”** மேலும் தொடர்ந்தான். “நான் அநேக வருடங்களாக பைரவஸாதனை செய்துவருகிறேன். எனக்கு பைரவ தரிசனம் ஏற்பட்டால் என்னால் தேஹத்துடன் கைலாயத்தை அடையமுடியும். அதற்கு நான் ஸர்வக்ஞரான ஒருவருடைய தலையை ஹோமம் செய்ய வேண்டும். அப்படி ஒரு வரம் எனக்கு கிடைத்திருக்கிறது. இதற்காக பல இடங்களில் தேடினேன் கிடைக்கவில்லை. இன்று தங்களின் தரிசனம் எனக்குக் கிடைத்தது. தாங்கள் பிறரின் உய்விற்காகவே வாழ்கிறீர்கள். தாங்கள் சரீரத்தின்மீது பற்று இல்லாதவர். தாங்கள் அருள் புரிந்தால் என் விருப்பம் நிறைவேறும்'' என்றான்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த ஸ்ரீ சங்கரர் உக்ரபைரவனிடம் “அப்பா! மரம் காய்ந்தால் விறகாகப் பயன்படுகிறது. யானை இறந்தால் ஆயிரம் பொன் என்பார்கள். ஒரு பசுமாடு இறந்தால் அதன் கொம்பு, பரம சிவனுக்கு அபிஷேகம் செய்ய பயன்படுகிறது. புலித் தோலும், மான் தோலும் ஜபம் செய்ய ஆசனமாகிறது. யானை முடியும் புலி நகமும் பலவகையில் பயன்பெறுகின்றன. ஆனால் இந்த மனித சரீரம் மட்டும்தான் எதற்கும் பயன்படுவதில்லை. என் தலையை பகவானுக்கு அர்ப்பணிக்க எனக்கு பூர்ண சம்மதம். ஆனால் இது என்னுடைய சிஷ்யர்களுக்குத்

தெரிந்தால் உன்னுடைய எண்ணம் நிறைவேறாது. அவர்களுக்குத் தெரியாமல் இதை நிறைவேற்ற எனக்கு ஏதாவது வழி இருந்தால் கூறு” என்றார்.

இதைக்கேட்ட **“உக்ரபைரவன்”** மிகுந்த சந்தோஷத்துடன் “ஆஹா! தாங்கள் கூறியது எனக்கு மிக்க சந்தோஷத்தை அளிக்கிறது. தங்கள் கருணையே கருணை! அருகாமையில் யாரும் செல்ல முடியாத அடர்ந்த காடு ஒன்று உள்ளது. அங்கு பைரவ பூஜைக்கும் ஹோமங்களுக்கும் நான் ஏற்பாடுகளைச் செய்கிறேன். அடுத்த அமாவாஸையன்று தாங்கள் வந்தால் நான் தங்களை அந்த இடத்திற்கு அழைத்துச் செல்கிறேன்” என்றான்.

அதற்கு ஸ்ரீசங்கரர் “அப்படியே ஆகட்டும்” என்று அமைதியாகக் கூறினார்.

**“உக்ரபைரவன்”** எதிர்பார்த்த அமாவாஸையும் வந்தது. ஸ்ரீசங்கரர் சமாதியில் இருந்தார். சிஷ்யர்கள் எல்லாம் பர்ணசாலைக்குச் சென்றுவிட்டார்கள். நடு நிசி. ஸ்ரீசங்கரர் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் தன் தண்டத்தையும், கமண்டலத்தையும் எடுத்துக்கொண்டு வேகமாக காட்டை நோக்கி நடந்தார். அவர்தான் ப்ரஹ்மஞானியாயிற்றே. அவருக்கு ஏது பயம்?

தொடரும்...

**வேதபாராயண வகுப்புகள்**

கும்பகோணம் ப்ரும்ஹஸ்ரீ கைலாச கணபாடிகள் தலைமையில் சந்த்யா வந்தனம் மற்றும் ஸூக்தங்கள் பிரதிவாரம் ஏழு நாட்களும் ஆன்லைன் வழியாக கற்றுக்கொடுக்கிறார்கள். பயனடைய வேண்டுகிறோம்.

தொடர்புக்கு : **9445102193 / 9994926537**

## ஔவையார்
# “மூதுரை”

(பழமையான அறக்கருத்துக்களைக் கொண்டது)

## வெண்பா 25

**நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்**
**அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு – நெஞ்சில்**
**கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்**
**கரவிலா நெஞ்சத்தவர்**



**பொருள் :** தன்னிடம் விஷமிருப்பதை அறிந்து நாகம்பாம்பு மறைந்து வாழும். விஷமில்லாத தண்ணீர்ப் பாம்போ பயமில்லாது எங்கும் வெளியில் திரிந்து கொண்டிருக்கும். அதைப்போலவே நெஞ்சில் குற்றம் உடையவர்களும் அதை மறைத்தே வாழ்ந்து கொண்டிருப்பர். குற்றமில்லாதவர்களோ கபடமின்றி வெளியில் திரிந்து கொண்டிருப்பர்.

**விளக்கம் :** இந்த வெண்பாவில் ஔவை பாட்டி நெஞ்சில் குற்றகுணம் உள்ளவர்களையும், குற்றமில்லாதவர்களையும் நல்ல பாம்புடனும், தண்ணீர் பாம்புடனும் ஒப்பிடுகிறார்.

கொடிய நஞ்சு உள்ள நாகப்பாம்பு புற்றுக்குள்ளே

பதுங்கிவாழும். தன்னுள்ளே நஞ்சு இருப்பதை அது அறியும். அதைத்தான் **“நஞ்சு உடைமை தான் அறிந்து”** என்கிறார் ஔவை பாட்டி. ஜனநடமாட்டம் உள்ள இடங்களில் அது நடமாடாது. அப்படி நடமாடினால் மக்கள் அதை அடித்து கொன்றுவிடுவார்கள். ஆனால் நீர் பாம்பு எல்லா நீர் நிலைகளிலும் உலாவும். மக்களுக்கு அதைப் பார்த்தால் “இது விஷமில்லாத பாம்பு, கடித்தாலும் ஒன்றும் செய்யாது” என்று அதற்கு தீங்கு இழைக்கமாட்டார்கள்.

இதுபோல் வஞ்சகர்கள் தங்கள் நெஞ்சிலே வஞ்சத்தை ஒளித்து வைத்துக்கொண்டு நம்மிடம் கலந்து உறவாடுவார்கள். வெளிப்படையாக பேசமாட்டார்கள். நாம் அவர்களுடைய வஞ்சத்தை அறியாமல் இருந்தால் நாம் ஏமாந்துபோவோம். ஆகையால் நாம் அவர்களிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் நெஞ்சில் வஞ்சம் இல்லாதவர்கள் வெள்ளை உள்ளத்துடன் நம்மிடம் வெளிப்படையாக பேசுவார்கள், பழகுவார்கள். இதை நாம் உணர வேண்டும்.

நெஞ்சில் வஞ்சம் உள்ளவர்கள் விஷமுள்ள நாகப்பாம்பு போன்றவர்கள் என்றும், வஞ்சம் இல்லாதவர்கள் விஷமில்லாத தண்ணீர் பாம்பு போன்றவர்கள் என்றும் அழகாக கூறுகிறார் ஔவை பாட்டி.

தொகுப்பு : **பரிதி**

***அனைவருக்கும் சரஸ்வதி பூஜை, விஜயதசமி மற்றும் இனிய தீபாவளி திருநாள் நல்வாழ்த்துக்கள்.***

***வேதபாரதி.***

ஓம் நமோ பகவதே வாஸுதேவாயா



# ஸ்ரீ குருவாயூர் கோயில் வரலாறும் மஹிமைகளும்

நாராயணன் பகுதி 1

*அன்புள்ளம் கொண்ட வாசகர்களே!*

*தங்கள் கரங்களில் தவழ்ந்துகொண்டிருப்பது* **"வேதபாரதி செய்திகள்"** *புத்தகத்தின் 11ம் ஆண்டின் முதல் இதழ் சென்ற (செப்டம்பர் 24) மாத இதழில் ஆசிரியர் அவர்கள்* **"வேதபாரதி செய்திகள்"** *புத்தகத்தின் 11ம் ஆண்டு இதழ் புதிய கட்டுரைகளுடனும், புதிய பொலிவுடனும் வெளிவரவுள்ளது" என்ற அறிவிப்பை வெளியிட்டிருந்தார். இது குறித்து ஆசிரியர் திரு.வெங்கட்ராமன் ஜி அவர்கள் என்னுடன் ஆலோசித்த போது, சிறுவயது முதல் நான் பூஜிக்கும் ஸ்ரீகுருவாயூரப்பனின் மஹிமைகள் குறித்தும் அவர் கோயில் கொண்டு* **"பூலோக வைகுண்டம்"** *என்று போற்றப்படும் ஸ்ரீகுருவாயூர் கோயில் குறித்தும் தொடர் கட்டுரை ஒன்று எழுதவிரும்புவதாக கூறினேன். அதற்கு, அவர் மிகுந்த சந்தோஷத்துடன் சம்மதம் தெரிவித்தார். அவர் சம்மதத்துடன் இதோ கட்டுரை ஆரம்பம்.*

*தங்கள் அன்பிற்கு பாத்திரமான*

**சூரியநாராயண மாமா**

# அத்தியாயம் – 1
## கடவுளின் தேசம்
### (கேரள தேசத்தின் தோற்றம்)

நமது பாரததேசம் ஒரு புண்ணிய பூமி. அதில் எங்கு சென்றாலும் புண்ணிய க்ஷேத்திரங்களைக் காணலாம். இயற்கை எழிலுடன் விளங்கும் கேரள தேசத்திலும் அத்தகைய க்ஷேத்திரங்கள் ஏராளம் ஏராளம்.

ஸ்ரீ மஹாவிஷ்ணுவின் அவதாரங்களை **"தசாவதாரங்கள்",** அதாவது 10 அவதாரங்கள் என்று கூறுவார்கள். ஆனால் ஸ்ரீமத் பாகவதத்தில் பகவான் ஸ்ரீ மஹாவிஷ்ணு எடுத்த அவதாரங்கள் மொத்தம் 22 என்று கூறுகிறது. இந்த 22 அவதாரங்களில் பகவான் 16-வது அவதாரமாக எடுத்த அவதாரம் **"பரசுராமர்"** அவதாரம்.

லோகத்தில் க்ஷத்திரிய மன்னர்களின் 21 தலைமுறைகளை கருவறுக்கவே பகவான் **"பரசுராமர்"** அவதாரம் எடுத்தார்.

த்ரேதா யுகத்தில் சப்தரிஷிகளில் ஒருவரான ஜமதக்னி மஹரிஷியும் அவரது பத்தினி ரேணுகாதேவியும் சிவனை நோக்கி தவம் செய்தார்கள். அந்த தவத்தின் பயனாக ஜமதக்னி தம்பதியருக்கு ஐந்தாவது புத்ரனான பகவான் மஹாவிஷ்ணு வைசாக மாத, சுக்லபக்ஷ, த்ருதீயை, இரவின் முதல் யாமத்தில் புனர்வஸு நக்ஷத்ரத்தில் அவதரித்தார். குழந்தைக்கு **"ராமபத்ரா"** என பெயர் சூட்டினார்கள். இவர் சிவனை நோக்கி கடும் தவம் இருந்ததால், அந்த தவத்தை மெச்சிய சிவன் இவர் முன் தோன்றி தெய்வீக கோடாரியை ராமபத்ராவுக்கு வழங்கினார். கோடாரிக்கு **"பரசு"** என பெயர். அன்று முதல் அவருக்கு **"பரசுராமர்"** என்ற பெயர் நிலைத்து நின்றது.

"பரசுராமர்" 21 தலைமுறை க்ஷத்ரிய ராஜாக்களை

ஸம்ஹாரம் செய்து அவர்களுடைய ராஜ்யங்களை அபகரித்துக்கொண்டார். லோகம் முழுவதும் அவர் கைக்கு வந்துவிட்டது.

சில காலம் கழித்து அவருக்கு வாழ்க்கையில் விரக்தி ஏற்பட்டுவிட்டது. “ப்ராம்மண ஜென்மம் எடுத்தும் ஸாத்வீகமாக உலகிற்கு நல்லது செய்யாமல் கொலை கொள்ளைகளை ஏராளம் பண்ணிவிட்டோமே. இவ்வளவு பெரிய ராஜ்யத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? என்று யோசித்து லோகம் முழுவதையும் “கச்யப மஹரிஷிக்கு” தத்தம் செய்துவிட்டார்.

“பூமியை தானம் கொடுத்தபிறகு நாம் இங்கே வாஸம் செய்வது சரியில்லை, இந்த தேசத்தை விட்டு வெளியே போய் ஒரு புதிய இடத்தில் இருந்து **“தபஸ்”** செய்வோம்’’ என்று நினைத்து நாட்டை விட்டு புறப்பட்டுவிட்டார்.

தொடரும்..



||Shri Chowdeshwari Prasanna||

**SHREE SHANKARA THAPOVANAM**

**(Shree Chandramouleswara Seva & Trust)**

Plot No.596, VGP Jayanagar, Onnalavadi, Thorapalli Panchayat, Rayakotta Road, HOSUR – 635126.

**MONTHLY SEVA**

1. Pradosha Pooja
2. Shukla Panchami Pooja
3. Ashlesha Abhishekam
4. Sankasthahara Chatrurthi
5. Go Pooja on Fridays

**GAU POSHANA SEVA**

1 Cow feeding for day rs.145/-
10 cows for day Rs.1,450/-
1 Cow for month Rs.4350/-
10 Cows for month Rs.43,500/-



**Life Time One day Pooja for Every year (Life Membership) Rs.5001/-**



***Devotees are requesting to contribute for Gou Seva***

**For Online Payments**

A/c Shree Chandramouleswara Seva & Trust, Inidan Bank,
A/c No.6189034010 IFSC Code : IDIB000B142
Branch : Hosur

# ராஜலட்சுமி கல்யாண மண்டபம்

வேளச்சேரி மெயின் ரோடு, தண்டீஸ்வரம்,
சென்னை - 600 042.



- 800 பேர் அமர்ந்து ஆசிர்வதிக்க ஏ/சி ஹால்.
- சகல வசதிகளுடன் கூடிய மணமகன், மணமகள் அறைகள்.
- உறவினர்கள் தங்க - குளிருட்டப்பட்ட அறைகள்.
- விசாலமான கார் பார்க்கிங்.
- வெகு அருகில் சிவன், பெருமாள் ஆலயங்கள்.
- நகருக்கு மத்தியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற மண்டபம்.
- 24 மணி நேரமும தண்ணீர் & மாடுலர் கிச்சன் வசதி.

தொடர்புக்கு

**48625585 / 9840545585**

தாம்பூலத்திற்கு சிறந்தது
வாய் மணக்க, மனம் மகிழ

S.K.S. சீவல்

மயிலாடுதுறை.
செல் : 94431 22509

**ஆசாரக் கோவை - 18**

**உணவு உண்ணும் முறை**

*நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலம்செய் (து)*
*உண்டாரே உண்டார் எனப்படுவார் அல்லாதாக*
*உட்டார்போல் வாய்பூசிச் செல்வர் அது எடுத்துக்*
*கொண்டார் அரக்கர் குறித்து.*

*கருத்துரை : நீராடிக் கால்கழுவி வாய் துடைத்து உணவைச் சுற்றி நீரால் மண்டலித்து அவரவர் இறைவனை நினைத்து உண்பவரே உண்மையாக உண்பவர். அல்லாதவர் உணவை அசுரர் எடுத்துக் கொள்வர்.*

வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்

வாழ்க வளமுடன்!

# மஹா பெரியவாளின் அற்புத விளக்கங்கள்




## ஹிந்து மதம்

கலை, சிற்பம், சங்கீதம், காவியம், ஜோதிஷம் – கணிதம் மாதிரி அறிவு சாஸ்திரங்கள், வைத்திய சாஸ்திரம் என்று எதை எடுத்தாலும் இந்தியாவுக்கு நிகர் எதுவுமே இல்லை என்று லோகமே வானளாவப் புகழ்கிறது. உபநிஷத்து, கீதை, ராமாயணம், சாகுந்தலம் இந்த மாதிரி உலகத்திலேயே இல்லை என்கிறார்கள். தமிழ் நூல்களிலேயே தேவாரம், திவ்யப் பிரபந்தங்கள் போன்ற பக்தி நூல்கள் லோகத்திலேயே வேறெங்கும் இல்லை என்கிறார்கள். திருக்குறளைப் பார்த்து இப்படியும் ஒரு சின்ன நூல் அத்தனை நீதிகளையும் இவ்வளவு தெளிவாக எடுத்துச் சொல்வதற்கு உண்டா, என்று ஆச்சரியப்படுகிறார்கள். என்ன கோபுரம், என்ன சிற்பங்கள், திவ்விய விக்கிரகங்கள், எப்படிப்பட்ட சங்கீதம், பரத நாட்டியம் என்று அந்நிய தேசத்தவர்கள் எல்லாம் பிரமித்து, தாங்களாகவே இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதற்காக வீடு வாசலை எல்லாம் விட்டுவிட்டு இங்கே ஓடி வருகிறார்கள். வெள்ளைக்காரர்கள் நம்மை அடிமைப்படுத்தி, ஒரு பக்கத்தில் நம்மிடம் இல்லாத தோஷங்களை எல்லாம் சுமத்தி, நம்மைப் பிரித்துப் பிரித்து வைத்து ஆட்சி பண்ணினாலும் இன்னொரு பக்கத்தில் நம் நாகரீகத்தைப் பார்த்து அதிசயப்பட்டு நம்முடைய சாஸ்திரங்களை எல்லாம் தேடித் தேடி எடுத்து ஆராய்ச்சி செய்து, தங்கள் பாஷையில் தர்ஜுமா பண்ணி (மொழி பெயர்த்து) வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

தொடரும்....

# சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த மஹா ஸ்வாமிகள் அருளியவை



## ஆத்மஞானம் அடைவதற்கு வேண்டிய தகுதி

சுவர்க்க பதவியை அடைவதற்காக விச்வஜித் என்னும் யாகத்தை வாஜசிரவஸ் என்பவர் நிகழ்த்தினார். அந்த யாகத்தைச் செய்பவர் தன்னிடமுள்ள பொருட்களையெல்லாம் தானம் செய்துவிட வேண்டும் என்பது நியதி. அவருக்கு நசிகேதன் என்று ஒரு மகன் இருந்தான். சிரத்தையின் மறு உருவமாய்த் திகழ்ந்த அவன், தனது தந்தை புரோகிதர்களுக்கு அளிக்கும் மலடுதட்டிய கிழட்டுப் பசுக்களைப் பார்த்து திகைத்து நின்றான். தனது தந்தையின் வேள்வியில் ஏற்பட்ட இக்குறையை ஈடுகட்டுவதற்கு, மகன் என்ற முறையில் தான் ஏதாவது செய்தே தீர வேண்டும் என்று நசிகேதன் எண்ணினான். தன்னையே தானமாகக் கொடுப்பதற்கு தான் ஒப்புக் கொள்ள வேண்டும் என்று அவன் முடிவெடுத்தான். எனவே, அவன் தனது தந்தையை அணுகி 'நீங்கள் என்னை யாருக்குத் தானமாகக் கொடுக்கப் போகிறீர்கள்'' என்று கேட்டான். வாஜஸ்ரவசர் அவனைச் சட்டை செய்யவில்லை. மூன்றாவது முறையாக நசிகேதன் இதே கேள்வியைக் கேட்டதும், வாஜஸ்ரவசர் கோபமாக தன் மகனைப் பார்த்து, "உன்னை யமனுக்கு அளிக்கிறேன்'' என்று கூறினார்.

"என் தந்தை, ஒரு பேச்சுக்காக இத்தகைய வார்த்தைகளைக் கோபத்தில் கூறியிருந்தாலும், அவை பொய்யாவதற்கு அனுமதிக்கக் கூடாது'' என்று நசிகேதன் நினைத்தான். அச்சிறுவன் யமலோகத்தைச் சென்றடைந்தான்.

தொடரும்...

# தர்மத்தின் குரல்
# பூஜ்யஸ்ரீ பரமானந்த பாரதி ஸ்வாமிகள்



## அத்தியாயம் 3 : வேதங்கள்

*3-9 வேதங்கள் வெளிப்பட்டவிதம்*

*முந்தைய ஆய்வில், வேதங்கள் மனிதர்களால் இயற்றப்பட்டிருக்க முடியாது என்பது தர்க்க ரீதியாகக் காட்டப்பட்டது. அதன் காரணங்கள் ஐந்து,*

*1. இயற்றியவர் பெயர் தெரியவில்லை.*

*2. அவற்றின் சங்கீத அமைப்பு, காலத்தால் குலையவில்லை.*

*3. அவை மிகவும் விஸ்தாரமானவை.*

*4. அவ்வளவு விஸ்தாரமாயிருந்தும், அவற்றில் முரண்பாடுகள் இல்லை.*

*5. சமீபத்திய கண்டுபிடிப்புகள் அவற்றில் சொல்லப்பட்டுள்ளன.*

*எனவே, அவை மனிதரால் இயற்றப்பட்டிருக்க முடியாது, அவ்வாறென்றால், அவற்றை ஆக்கியது யார், வேதங்கள் நமக்கு எப்படித் தெரியவந்தன? ஆகிய வினாக்கள் எழுகின்றன.*

*இந்த வினாக்களுக்கெல்லாம் சாஸ்திரம் இவ்வாறு விடையளிக்கிறது.*

*விண், வளி, தீ, நீர், மண், தாவரங்கள், விதைகள், இறுதியாக மனிதர்களும், விலங்குகளும் என்ற வரிசையில் இறைவன் ப்ரபஞ்சத்தைப் படைக்கிறார். இந்தப் படைப்பில் காலம் ஒரு கல்பம் வரையிலானது. பின்னர் அது கலைகிறது. பின்னர் மீண்டும் படைக்கப்படுகிறது.*

*தொடரும்...*

## நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்

மஹா பெரியவா எழுத்தாளர்களைப் பற்றி கூறும்போது **“எழுத்தாளர்கள் ஜனங்களுக்கு பிடித்ததை மட்டுமே சொல்வது என்று வைத்துக்கொள்ளக் கூடாது. அவர்களின் அறிவை, மனதை உயர்த்துகிற விஷயங்களையே எழுத வேண்டும். இதை சுவாரசியமாகச் செய்யவேண்டும. உத்தமமான விஷயங்களைப் புதுப்புது விதங்களில் உணர்த்த வேண்டும்”** என்று கூறியுள்ளார்.

**“வேதபாரதி செய்திகள்”** பெற்றுள்ள எழுத்தாளர்களும், மஹாபெரியவா கூறியவாறு தன்னலம் கருதாத எழுத்தாளர்களே அவர்களின் சேவைகளை நன்றியுடன் இங்கு நினைவு கூறுகிறோம்.

**1. ஸ்ரீ க்ருஷ்ண ஜகந்நாதன்ஜி :** வேதபாரதியின் தந்தை. வேதபாரதி அமைப்பிற்கு **“வேதபாரதி”** என்று பெயர் சூட்டியவர். மிகச் சிறந்த பேச்சாளர். இவர் அக்டோபர் 2019 முதல் வேதபாரதி செய்திகள் புத்தகத்தில் **“அறிவோம் வேதம்”** என்ற தலைப்பில் மாதா மாதம் முக்கியமான வேத மந்திரங்களையும், அவற்றின் பொருளையும் எழுதிவருகிறார்.

**2. திருமதி. காந்தலக்ஷ்மி சந்திரமௌலி :** பத்திரிகையாளர், சிறந்த எழுத்தாளர். குழந்தை உள்ளம் கொண்டவர். வேதபாரதி அமைப்பு 29.08.2010 அன்று முதலில் நடத்திய **“யுவஸ்ரீ வாழ்வியல் பயிலரங்கம்’’** என்ற நிகழ்ச்சிக்கு இவருடைய இல்லத்தில்தான் வித்திடப்பட்டது. இவர் குழந்தைகள் வளர்ப்பு குறித்து **“பெற்றோர்களே கவனியுங்கள்”** என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதிவருகிறார். இதை ஜனவரி 2015 முதல் தொடர்ந்து எழுதிவருகிறார். ஒரு மாதம்கூட தவறியதில்லை. இவருடைய தொடர்கட்டுரை வேதபாரதி இதழிற்கு மகுடம்




சூட்டியதுபோல் அமைந்துள்ளது. இதன் முதல் இரண்டு பகுதிகளையும் தனி புத்தகமாக "வேதபாரதி" வெளியிட்டுள்ளது. தற்போது மூன்றாம் பாகம் வந்துகொண்டிருக்கிறது. இதற்கு வாசகர்களிடம் குறிப்பாக தாய்மார்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.



**3. டாக்டர். ஷ்யாமா ஸ்வாமிநாதன் :** சிறந்த சமூக சேவகி, சிறந்த எழுத்தாளர், பத்திரிகையாளர், மொழிபெயர்ப்பாளர் என பன்முக ஆற்றல் கொண்டவர். "வேதபாரதி" அமைப்பின் ஆரம்பத்திலிருந்து உடன் இருந்து ஒரு தூண்போல் விளங்குபவர். இவர் 2019 மார்ச் மாதம் முதல், தேசவிடுதலைக்காக போராடிய பெண்கள் குறித்து **"சாதனைப் பறவைகள்"** என்ற தலைப்பில் தொடர் கட்டுரை எழுதினார். இன்றும் பல தலைப்புகளில் கட்டுரைகளை எழுதிவருகிறார்.




**4. திருமதி. காந்தாமணி நாராயணன் :** இவரும் வேதபாரதி அமைப்பின் நிகழ்ச்சிகளுக்கு துணையாக இருப்பவர். சிறந்த எழுத்தாளர் இவர் 2022 செப்டம்பர் இதழ் முதல் இராமாயணத்தை **"இராமாயணம் தரும் படிப்பினை"** என்ற தலைப்பில் கட்டுரை எழுதிவருகிறார்.



**5. சூரியநாராயணன் மாமா :** 2014 ஆம் வருடம் புத்தகம் ஆரம்பித்தது முதல் வேதபாரதி அமைப்பிற்கு சேவை செய்துவருகிறார். இவர் எழுதிய முதல் கட்டுரை **"ஸ்ரீ லலிதாம்பிகையும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமமும்"** 2014 டிசம்பர் மாத இதழில் வெளியானது. அது முதல் "ஸ்ரீபகவத் கீதை", "ஸ்ரீ ஆதிசங்கர பகவத்பாதர்"

அவர்களின் வாழ்க்கை வரலாறு, ஸ்ரீமத் பாகவதம், ஔவையாரின் படைப்புக்கள் போன்ற கட்டுரைகளை தொடர்ந்து எழுதிவருகிறார். மேலும் மாமா அவர்கள் பரிதி, ஆதவன் போன்ற புனைப்பெயர்களிலும் எழுதிவருகிறார்கள்.



**6. திரு. மீ. சீனிவாசன், பரமக்குடி :** இவரும் சிறந்த எழுத்தாளர். பல ஆன்மீக கட்டுரைகளையும், பிரசித்திப்பெற்ற கோயில்கள் பற்றியும் எழுதிவருகிறார்.



**7. திரு. நடராஜன் (ஆதிரையன்) பாண்டிச்சேரி :** இவர் **"ஆதிரையன்"** என்ற புனைப்பெயரில் 2020 அக்டோபர் **முதல் "பசு", "புரோஹிதர்", "தருவின் நிழலில்"** என்ற தலைப்புகளில் புதுமையான கட்டுரைகளை எழுதிவருகிறார். இவருடைய கட்டுரையின் கருத்துக்கள் பலரும் அறியாதது. ஆனால் எல்லோரும் அறிந்துகொள்ள வேண்டியவை.



**8. திருமதி. சிவசங்கரி :** இளம் எழுத்தாளர். நல்ல சமூக கருத்துக்களை சிறு சிறு கதைகள் மூலம் எழுதிவருகிறார்.

இன்னும் பல எழுத்தாளர்களும் தங்கள் படைப்புக்களை புத்தகத்திற்கு அளித்து வருகிறார்கள்.

மேற்கண்ட எழுத்தாளர்களைக் குறித்தும் அவர்களுடைய கட்டுரைகளைக் குறித்தும் பல வாசகர்கள் தங்கள் பாராட்டுதல்களை தொலைபேசி மூலமும், கடிதங்கள் மூலமும் தெரிவித்து வருகிறார்கள்.

எழுத்தாளர்கள் அனைவரும் தங்களுடைய கட்டுரைகளை தொடர்ந்து அளித்து **"வேதபாரதி செய்திகள்"** மேலும் மேலும் சிறப்படைய செய்திடவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம்.

ஆசிரியர்.

# பூக்களோடு பேசுவோம்

**டாக்டர்.ஷ்யாமா ஸ்வாமிநாதன்“**

## “தெளிந்த மனம் எனும் மனோரஞ்சிதம்”

## பாகம் - 2



ஒரு சிலராவது மனோரஞ்சித மலரை வாங்கிவந்து, அத்துடன் பேசி மகிழ்ந்து இறைவனுக்குச் சாற்றி மகிழ்ந்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். மலர் பாடல் ஒன்று இருக்கிறது. ஒவ்வொரு மலருக்கும் ஒவ்வொரு தெய்வத்தை இணைத்து எளிய தமிழில் இருக்கிறது. அந்தப் பாடல் மனோரஞ்சிதம் பற்றி என்ன சொல்கிறது என்றால்,

**மனோரஞ்சிதப் பூ கொண்டுவந்தே எங்கள்**
**மனோன்மணியை பூஜித்தால்**
**ஞானமானசுகந்தமுடன் அவள் களிப்பு மிகத்**
**தந்திடுவாள்’ என்கிறது.**

மனோரஞ்சிதப்பூவைத் தேடித்தேடி ஆராய்ச்சி செய்தால் பற்பல அற்புத விஷயங்கள் கிடைக்கின்றன. அருகே படத்தில் மனோரஞ்சிதமலர் மாலை அணிந்த கிருஷ்ணனைப பார்க்கிறீர்கள். இவர் குருவாயூர் கிருஷ்ணனைப்போலவே எழுந்தருளியுள்ளார். **தென்திசையின் குருவாயூர்** என்று அழைக்கப்படும் இத்திருக்கோயில், வடசேரி ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் என்று பெயர் பெற்று, நாகர்கோவில் புறநகர் பகுதியில் உள்ளதாம். கேட்டவரம் கொடுக்கும் இந்த கிருஷ்ணனுக்கு, பெரியாழ்வார் திருமொழியில், இரண்டாம் பத்தில், ஏழாம் திருமொழியில், முதல் பாசுரத்தில் சொல்லியிருப்பது போல்,

ஆநிரைமேய்க்க நீபோதி, அருமருந்து ஆவது அறியாய்
கானகம் எல்லாம் திரிந்துஉன்கரிய திருமேனி வாட;

*பானையிற்பாலைப்பருகிப்பற்றாதார் எல்லாம் சிரிப்ப*
*தேனில்இனிய பிரானே! செண்பகப்பூச்சூட்டவாராய்.*

என்று நாமும் அன்போடு அழைத்து மனோரஞ்சிதப் பூவை சூட்டி வேண்டிய வரம் பெறலாம். அனைத்து தெய்வங்களுக்கும் சூட்டக் கூடிய இந்த மலரை அனைத்து மாநில மக்களும் ஹரசம்பா, மனோரஞ்சனி (கேரளா, வங்காளம்) லிலோசம்பா (குஜராத்) மனோரஞ்சிதம் (தமிழ்நாடு, கன்னடம்) என்றெல்லாம் அழைக்கிறார்கள்.

மனோரஞ்சிதம் தொடர்புடைய இரு வேறு தெய்வங்களுக்கான சிறப்பு வழிபாட்டு விவரங்களையும் தெரிந்து கொள்ள முடிந்தது. இரண்டையும் தங்கள் எழுத்துக்களின் மூலம் உலகறியச்செய்த அன்பர்களான பி.ஆர்.ராமச்சந்திரன் அவர்களும், ஸ்ரீ நரசிம்மபட்டர் அவர்களும், அவரவருக்கான தெய்வங்களை விவரித்திருக்கும் விதம் ஆழந்தபக்திக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது.

திரு.பி.ஆர்.ராமச்சந்திரன் அவர்கள் ஓய்வு பெற்றவிஞ்ஞானி. பாலக்காட்டில் உள்ள மிகப் பிரபலமான அக்ரஹாரம் நூரணி இங்கே எழுந்தருளியுள்ள பூரண பூஷ்கலாவுடனான ஸ்ரீ சாஸ்தா 200 ஆண்டுகளுக்கு முன்பு பூமியிலிருந்து கண்டெடுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தப் பகுதியில், நூரணி சாஸ்தா பிரீதி பாடல்கள் மிகவும் பிரசித்தம். ஸ்வாதித்திருநாள் சமஸ்தானத்தில் மிகவும் பிரசித்தி பெற்றஸ்ரீ பரமேஸ்வர பாகவதர் பெரும்பாலான பாடல்களைத் தொகுத்துள்ளார். அதிலுள்ள ஒரு பாடல்,



நூரணிசாஸ்தாவுக்கு மிகவும் பிரியமான மலராக மனோரஞ்சிதத்தைக் குறிப்பிடுகிறது.

ஸ்ரீ நரசிம்மபட்டர், அழகிய மணவாளனின் பூச்சட்டித்திருநாளை வர்ணிக்கும் விதமோ ஸ்ரீ வைகுந்தநாதனை நம் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்திவிடுகிறது. இந்தத்திருவிழாவில் முக்கிய மலராகக் கருதப்படுகிறது. மனோரஞ்சிதம் இது மட்டுமல்ல, மனோரஞ்சிதம், மகிழம், மல்லிகை போன்ற அதி சுகந்தம் வீசும் மலர்களால் மட்டுமே தயாரிக்கப்பட்ட புஷ்ப அங்கியை அணிந்திருப்பாராம் அழகிய மணவாளர். அலங்காரங்கள் முடிந்தவுடன் பெருமாளின் களைப்பு நீங்க குளிர் பானகமும், வடைபருப்பும் நிவேதனம் செய்து, ஒய்யாரநடையுடன் மீண்டும் மூலஸ்தானத்தில் எழப்பண்ணுவார்களாம்.

இவ்வாறு நாம் மனோரஞ்சிதமலர்களை இறைவனுக்கு அர்ப்பித்து அகமகிழும்போது, சீன தேசம் இதன் இலைகளையும், பூக்களையும் பல்வகை நோய்களுக்கும் மருந்தாகப் பயன்படுத்துகிறது. நறுமண மிக்க இதன் சாற்றினை வாசனைத் திரவியங்கள் தயாரிக்கப்பயன்படுத்துகிறது. நம் கிராம மக்களும் இதனை டிகாஷன் போல் தயாரித்து, சில கொடிய வியாதிகளுக்குப் பயன்படுத்தியதாகத் தெரிகிறது. மலர்களின் மருத்துவ குணங்களை நாம் அவ்வளவாக அறிந்திருக்கவில்லையென்றாலும், அதன் ஆன்மீக முக்கித்துவத்தை உணர்ந்து, இறைவனுக்கு அர்ப்பணித்து மகிழ்வோம். அடுத்த மலராக **“இட்லி பூ”** என்று அனைவராலும் அன்புடன் அழைக்கப்படும் **“வெட்சி”** என்று தமிழ் இலக்கியமும், **“விருட்சி”** என்று பக்தர்களும் அழைக்கும் கண்கவர்மலரோடு பேசுவோம்.

தொடரும்...

# வேதவகுப்பின் அனுபவம்

1. நான் (மே 2021) கோவிட் டைமிலிருந்து வேதபாரதியில் சேர்ந்து வேதம் படிப்பதால் தனிமை இல்லை.
2. இந்த வகுப்பினால் நிறைய உறவுகளை நாம் தினமும் பார்த்துக் கொண்டு இருப்பது போன்ற உணர்வை கொடுக்கிறது.
3. தினமும் வகுப்பு இருப்பதால் மாலைப் பொழுது நல்ல உபயோகமாகச் செல்கிறது.
4. என்னுடைய 70 வயதில் மருத்துவர்கள் கூறுவது போல் மனிதர்களிடம் பேசவேண்டும் என்பதற்காக வெளியே செல்ல வேண்டிய அவசியமில்லை.
5. வேதம் படிப்பதால் ஞாபக சக்தி குறையாமல் இருக்கிறது.
6. வேதம் படித்துக் கொண்டு இருப்பதால் எனக்கு இப்பொழுது பஜனை செய்யும்போது அஷ்டபதி முன், பின் ஸ்லோகங்கள் சரளமாக பாட முடிகிறது.
7. மனதிற்கு புத்துணர்ச்சி அளிக்கிறது.
8. பொது இடங்களில் விசேஷங்களின் போது ஸூக்தம், ருத்ரம், சமகம் சொல்லும்போது தனி மரியாதை கிடைக்கிறது. இதை என் அனுபவத்தில் பெற்றேன்.
9. எங்களுக்கு நல்வழிகாட்டி வரும் மஹா குருஜி ஸ்ரீ கைலாச கனபாடிகள் அவர்களுக்கும், வேதபாரதி குழுவினருக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**A. வெங்கட்ராமன்,** ஈரோடு
Batch No.10, 94439 88150

## வேதபாரதி ஆன்மீக அமைப்பு நடத்தும் வேதபாரதி செய்திகள் 11-ம் ஆண்டு சிறப்பிதழுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

# RELIANCE COFFEE

**பழமை மணத்துடன் பாரம்பரியம் மாறாமல்**



*மித்ரஸ்யமா சக்ஷீ ஷா ஸர்வாணி பூதானி ஸமீக்ஷந்தாம்*
*மித்ரஸ்யஅஹம் சக்ஷீஸா ஸர்வாணி பூதானி ஸமீக்ஷே*

*யஜூர் வேதம் : 36:19*

**பொருள் :** எல்லா உயிரினங்களும் என்னை நண்பராகக் கருதட்டும். அதேபோல நானும் எல்லா உயிரினங்களையும் எனது நண்பர்களாகக் கருவேனாகுக.

**Gandhji Road, Mayiladuthurai**
**Mobile : 9500282620 / 9442988774**

நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல். குறள் 948

# KRUPAS DENTAL CLINIC
## கிருபாஸ் பல் மருத்துவமனை

**Dr. வெ. கிருபாநிதி, B.D.S., M.D.S., (Ortho)**
பல் மருத்துவர் - பல் சீரமைப்பு நிபுணர்


**Dr. வித்யா கிருபாநிதி, B.D.S.,**
சிறப்பு பல் மருத்துவர்





**பார்வை நேரம் :**
**10.30 a.m - 1.30 p.m &**
**5.00 p.m. - 8.00 p.m.**
**Sunday Holiday**

49, Mahadhana Street, Opp. to Venila Marriage Hall,
Kamarajar Salai, Mayiladuthurai - 609 001.
**For Appointment : 9487886090**



# ஸ்ரீ மாதா டிரஸ்ட்

**2000-ஆம் ஆண்டு முதல் ஏழை புற்றுநோயாளிகளின் துயர் தீர்க்கும் "இலவச காப்பகம்"**



There has never been, nor will there ever be any gift equal to the gift of food..."
(Mahabharat - Anusasana Parva, 13.63.-6)

V Krishnamoorthy
Managing Trustee



பிரதி பலன் கருதாது நீ செய்யும் தர்மங்களால் கிடைக்கும் ஆனந்தமே மோக்ஷம். இது இப்பிறவியிலேயே கிடைக்கும். மறு ஜன்மம் வரை தர்மவான்கள் காத்திருக்க வேண்டாம்.

– ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி மஹாபெரியவர்

ஏழை புற்றுநோயாளிகளுக்கு உணவு கொடுத்து அவர்கள் உயிர் வாழ உதவுவதே எங்கள் லட்சியம்... எந்நிலையிலும் இறைவன் அருளால் அதை நிச்சயம் தொடர்வோம்... உங்களது மேலான நிதி உதவியுடன்..!!



புன்னகை ததும்பும் முகத்துடன் வலம் வரும் இந்தச் சிறுவனுக்கு புற்றுநோய் என்கிற உண்மையை நமது மனம் ஏற்க மறுக்கிறது. தனது தாயுடன் நமது நம்ம தர்மசாலாவில் தங்கி, அடையாறு புற்றுநோய் மருத்துவ மனையில் சிகிச்சை மேற்கொள்ளும் இவனுக்கு, புற்றுநோய் என்றால் என்ன? இந்நோய் தனக்கு ஏன் வந்தது? என்கிற எதுவும் தெரியாது. ஆனால் புற்றுநோய் வந்தால் வலிக்கும் என்பது மட்டும் தெரிந்திருக்கிறது. ஒருநாள் அவன், நமது நிர்வாக அறங்காவலரிடம்... "தாத்தா நான் எப்போ ஸ்கூலுக்கு போவேன்" என்றான். அதற்கு நமது நிர்வாக அறங்காவலர் "தவறாமல் மருந்து – மாத்திரை சாப்பிடு, தைரியமாக இரு... நோய் குணமாகி சீக்கிரம் பள்ளிக்குப் போகலாம்" என்று ஆறுதல் கூறினார். இவனைப் போன்றே நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகள் தங்களுக்கு நிம்மதியான–சந்தோஷமான எதிர்காலம் நிச்சயம் உண்டு என்கிற நம்பிக்கையுடன் இருக்கிறார்கள். இவர்களது உயிர் காக்க உதவிடுங்கள். உண்மையான இன்பத்தை உணர்ந்திடுங்கள்...

# "ஸ்ரீ ஜெயேந்த்ர பெரியவா" நினைவு ஆதரவற்றோர் இலவச முதியோர் இல்லம்

செங்கல்பட்டு மாவட்டம், மாமண்டூரில் நமது இலவச முதியோர் இல்லம் இறைவன் அருளால் ஆதரவற்ற–ஏழை முதியவர்களுடன் முழுமையாக செயல்படத் துவங்கியுள்ளது. இம்முதியோர் இல்லத்தின் கட்டுமானச் செலவு சுமார் 13 கோடி என்கிற நிலையில், கட்டுமான நிறுவனத்திற்கு ரூ.2.5 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. இம்மாபெரும் தர்மசாம்ராஜ்யத்தை நன்கொடையாளர் களின் நிதி உதவியை பெற்று நிர்மாணித்த ஸ்ரீ மாதா டிரஸ்ட், மேற்படி நிலுவைத் தொகைக்கும், தினசரி நிர்வாகச் செலவுகளுக்கும், முதியவர்களுக்கு உணவு வழங்கு வதற்கும் பெரிய நிறுவனங்கள் மற்றும் மனித நேய மனிதர்களின் நிதி உதவியை பெரிதும் எதிர்நோக்கி உள்ளது.








ஆதரிப்பார் யாருமின்றி நமது முதியோர் இல்லத்தில் தஞ்சம் புகும் முதியவர்களுக்கு அன்பும், அரவணைப்பும் அளவின்றி வழங்கப்படுகிறது. வாரத்தில் மூன்று நாட்கள் சென்னை யிலிருந்து முதியோர் இல்லத்திற்கு வருகை தரும் நமது நிர்வாக அறங்காவலர், தனது உடன்பிறவா சகோதர – சகோதரிகளின் நலன் விசாரித்தும், அவர்களது அவசியத் தேவைகளை நிறைவேற்றியும் மகிழ்கிறார்.









நமது இலவச முதியோர் இல்லத்தில் வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் **கோ பூஜை** வைபவத்திலும், ஆன்மிகச் சொற்பொழிவிலும், நமது நிர்வாக அறங்காவலருடன் பங்கேற்று மகிழ்கின்றனர் நமது இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்கள்.

**நமது நம்ம தர்மசாலாவில் தங்கியுள்ள ஏழை புற்றுநோயாளிகள் (மற்றும்) இலவச முதியோர் இல்லத்தில் தங்கியுள்ள முதியவர்கள் நலன் காக்க தாங்கள் கீழ்கண்டவாறு நன்கொடை வழங்கி மகிழ, இருகரம் கூப்பி வேண்டுகிறோம்**

- ரூ.1,00,000/- நிதியளித்து நிரந்தர காப்பாளர் ஆகலாம்
- ரூ.75,000/- நிதியளித்து வள்ளல் ஆகலாம்
- ரூ.25,000/- நிதியளித்து "நம்ம தர்மசாலா"வின் ஒரு நாள் செலவினை ஏற்கலாம்
- ரூ.10,000/- நிதியளித்து ஒரு நாள் உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.5,000/- நிதியளித்து மதிய / இரவு உணவு செலவினை ஏற்கலாம்
- ரூ.3,000/- நிதியளித்து காலை உணவு செலவினை ஏற்கலாம்

Kindly send your contribution by CHEQUE / NEFT / CASH / M.O.

Account Name: SRI MATHA TRUST Bank : INDIAN OVERSEAS BANK
Branch: Gandhi Nagar, Chennai-20 Current A/c No.:163502000001090
IFSC: IOBA0001635


வெளிநாட்டு வங்கியில் கணக்கு வைத்திருப்பவர்கள் தங்களது நன்கொடையை கீழ்காணும் எங்களது FCRA A/c-க்கு அனுப்பலாம்
NAME : SRI MATHA TRUST S.B. A/C No. : 40384754521
BANK : STATE BANK OF INDIA BRANCH : NEW DELHI MAIN BRANCH
IFSC : SBIN0000691 SWIFT : SBININBB104

| | | |
|---|---|---|
| Donations to our Trust is exempted U/S.80(G) of the Income Tax Act. | Sri Matha Trust PAN No. **AACTS9747G** | நன்கொடை வழங்கும் அன்பர்கள் தங்களது விலாசம் மற்றும் "PAN" நம்பரை எங்களுக்கு அனுப்பவும். |

**Admn. Office**: "NAMMA DHARMASALA" 9, Yogi Garden, Sriram Nagar Main Road, Adjacent to IIT Compound, Near New Cancer Institute, Chennai-113. Tel: 044-24420727, 42661687

**Kindly contact : Mr. A.American - 9003247857 / Mr. R.Srinivasan - 9884827448**

vkrishnamoorthy.smt@gmail.com www.srimathatrust.org


வேதஸ்ரேணி
Mini Function Hall (A/C)
Traditional Ambience with Modern Amenities
Ayush Homam | Upanayanam | Birthdays | Engagement |
Sangeeth | Mehendi | Wedding | Valakaapu | Seemandham |
Shastiapthapoorthi | Sathabhishekam | Corporate Events
Ac Hall & Dining | Lift | Power Back Up | Car Parking |
CCTV | Hall Capacity- 150 -200 | Guest Rooms-2
Vedashreni, No 215, 3rd Street, Ramnagar Vijayanagar, Velachery, Chennai-42
95002 67471 | 98414 46897
VEG FOOD ONLY

## வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்

**Mr. N. VENKATRAMAN, B.Com.,**
Correspondent

## RAJ MATRICULATION HR. SEC. SCHOOL

**30 - 31, Punuheeswarar Sannathi Street,
Koranad, Mayiladuthurai - 609 001.**

## RAJ MATRICULATION SCHOOL

**13, Vallalar Koil Single Street,
Mayiladuthurai - 609 001.**

### மூதுரை - 26

### அரசனும் புலவனும்

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்
தன் தேசமல்லாமல் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு.

கருத்துரை : அரசனையும், குற்றமற கற்ற அறிஞனையும், சீர் தூக்கின் - அரசனைக் காட்டிலும் அறிஞனே சிறப்புடையவனாவான், அரசனுக்கு தன் நாட்டில் மட்டுமே சிறப்பு. அறிஞருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.




G. Harith Bharadwaaj, B.E.,
SRICHAKRA
BUILDERS & CONSULTANTS
OFFICE :
24/13, Vallalar Koil Double Street,
Mayiladuthurai - 609 001.
RESIDENCE :
20/11, Vallalar Koil Double Street,
Mayiladuthurai - 609 001.
Tel : 04364 - 224388
✆ : 98949 25454
harithbharadwaaj5454@gmail.com
srichakra90@gmail.com

உ

திருமண பொருத்தம் இலவசம்

(அனைத்து சமூகத்தினருக்கும்)

வாட்ஸ்அப் மூலம் மட்டும்



பையன்கள் பெண்கள்
ஜாதக நகல்களை
வாட்ஸ் அப்பில்
அனுப்புதல் வேண்டும்.

தேதியூர். V.J. ராமன்

ஆத்மார்த்த ஜோதிடர்

9003195599
9445230940

**Er. D.A. Devapaull**
Managing Director

**D.A. Devapaull**
DPT, Trainer

## STAR BUILDERS AND DEVELOPERS
*... we build your dreams*

C-95, Thally Hudco
Hosur - 635 109.
starbuildershosur@gmail.com

## STAR GYM & FITNESS CENTRE

#2, Renuga Devi Complex,
ESI Ring Road,
Muniswar Nagar,Hosur.

**We are specialised in :**
Industrial & Commercial Buildings
Residential Buildings, Apartments & Villas
Road Works & Layout
Approval Drawings & Structural Design
Star Earth Movers & Constriction Material Suppliers





- Weight Loss
- Weight Gain
- Fitness Training
- Strength Training
- TRX Training

**Cell : 94421 02057 / 70106 23102**

**R. Nandakumar**
LIC Advisor



**Cell : 93600 12399**
**86800 12399**

SBXC

## SRI BALAJI XEROX & COMPUTER

- Computer Job Typing & Printout (English & Tamil)
- Lamination
- Scanning, E-mail
- Colour Print
- Jathagam & Baby Name List
- UPS Facility
- LIC Service Point

**G-5, Samy Towers, Gandhi Road,**
**Srirangam, Trichy - 620 006.**
**Mail : sribalajixeroxcomputers@gmail.com**



# இனி புத்தகம் அச்சிடுவது எளிது...

**தங்கள் விருப்பம்போல் தமிழ், ஆங்கிலம் மற்றும் அனைத்து மொழிகளிலும்**

- பக்தி பாடல் / தல வரலாறு
- குடும்ப நினைவுகள்
- பள்ளி நினைவுகள்
- சமையல் குறிப்புகள்
- சுயசரிதை
- கதைகள்
- கவிதைகள்
- தங்கள் எண்ணங்கள்

**போன்றவற்றை குறைந்த செலவில் புத்தகமாக்கலாம்**

- திருமணம், வரவேற்பு மற்றும் பிறந்தநாள் நிகழ்ச்சிகளுக்கு 100 பிரதிகள் அச்சிட்டு கொடுக்கலாம்.
- தங்களின் தேவைக்கேற்ப 10 பிரதிகள் முதல் அச்சிடலாம்.
- நீங்கள் விரும்பும் படங்களை அட்டையில் அச்சிடலாம்.

## சபாநாயகம் பப்ளிகேஷன்ஸ்

✆ : 73733 33162, 99760 60611

**சிதம்பரம் - சென்னை**

sabanayagampublications@gmail.com
sprintmediacompany@gamil.com

*ஸ்ரீ குருப்யோ நம:*
*ஸ்ரீ மாத்ருப்யோ நம:*
*ஓம் நமோ பகவத்யை ஸச்சிதாநந்த ரூபிண்யை ஸ்வாத்மை பரதேவதா லலிதா*



# ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம கோடி அர்ச்சனை வைபவம் 2025

*சிவ: ஸக்த்யா யுக்தோ யதி பவதி சக்த: ப்ரபவிதும்*
*ந சேதேவம் தேவோ ந கலு குஸர: ஸபந்திதுமபி*
*அதஸ்-த்வா மாராத்யாம் ஹரி ஹர விரிஞ்சாதிபி-ரபி*
*ப்ரணந்தும் ஸ்தோதும் வா கதமக்ருத புண்ய: ப்ரபவதி*
*ஸௌந்தர்யலஹரி – ஆதிசங்கர்*

பராசக்தியான லோகமாதா ஸ்ரீ அம்பாளின் திருவருளால்தான் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன், ஸதாசிவன், அஷ்டதிக்பாலகர்கள் முதலான சகல ஜீவராசிகளும் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அனுக்ரஹித்தல் போன்ற சுபகார்யங்கள் செயல்படுகின்றன. பலரும் சுகமாய் இருக்கவே விரும்புகிறார்கள். அதற்கு “கிம் கரணீயம்” என்ன செய்ய வேண்டும் எனில் “சரணயுகளம் அம்பாயா”. ஸ்ரீ அம்பாளின் பாதகமலங்களை பிடித்து சரணடைவதே சிறந்த வழி. இஹத்திலும் பரத்திலும் சுகமும் மோக்ஷமும் அளிக்கக்கூடிய பரதேவதையான அம்பாளுக்கு பகவத் க்ருபையை முன்னிட்டும் ஸ்ரீ ஆச்சார்யாள் அனுக்கிரஹத்துடனும் 2001, 2013ஐ தொடர்ந்து மூன்றாவது முறையாக ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம கோடி அர்ச்சனையை லோக க்ஷேமார்த்தமாக நிகழும் குரோதி வருஷம் தை மாதம் 6ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (19.01.2025) முதல் தொடர்ச்சியாக காலை 8.45 முதல் 10.30 மணி வரை நடக்க இருக்கிற யஇந்த அர்ச்சனை வைபவத்தில் சுவாசினிகளும் ஆன்மீக அன்பர்கள் பலரும் பங்கு பெற்று இயன்றஅளவு பொருளுதவி பண உதவிகளை செய்து எல்லாம் வல்ல அம்பாளின் அனுகிரஹத்திற்கு பாத்திரர்கள் ஆகும்படி அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

**இடம் : ஸ்ரீ தேவி கருமாரி த்ரிபுரசுந்தரி ஆலயம்**
*சாமியார் தோட்டத் தெரு, அசோக்நகர், சென்னை – 83*

**ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம மண்டலி**
மேற்கு மாம்பலம்
சென்னை – 600033.
போன் : **9445073431 / 99406 78902**

# பெற்றோர்களே! கவனியுங்கள்!

## (குழந்தை வளர்ப்பு)

காந்தலக்ஷ்மி சந்திரமௌலி பாகம் - 3 பகுதி - 46

“திருமணம் செய்து கொள்கிறேன்” என்று மகனோ அல்லது மகளோ கூறிவிட்டால், உடனே “அந்த பையன், இந்த பெண்” என்று பேசுவதற்கு முன்பு நீங்கள் உங்கள் குழந்தைகளிடம் பேச வேண்டிய விஷயங்கள் இரண்டு உள்ளன. முதலாவதாக பண விஷயம் – Financial Management.

ஆம், உங்கள் மகன் அல்லது மகளுக்கு சம்பளம், செலவு, சேமிப்பு பற்றி தெரியுமா? இல்லை சம்பளத்தை உங்கள் கையில் “கொடுத்து போட்டு ஆறை நூறாக்குவார்கள்” என்று பிளாஸ்டிக் கார்டை தேய்த்து, தேய்த்து செலவு செய்துவிட்டு மாதத்தின் 15ம் தேதி முதல் “அம்மா, அப்பா காசு” என்று கையேந்தும் ரகமா? இது மகளோ அல்லது மகனோ யாராக இருந்தாலும் சரி, முதலில் தேவை “சரியான கவனிப்பு!”

தான் சம்பாதிப்பதை சேர்த்து வைக்கவும், வீட்டுச் செலவுக்கு தரவும், தாய், தந்தை, மனைவி, குழந்தைகளை காப்பாற்றவும் தெரியாதவர்களுக்கு திருமணம் செய்ய என்ன அவசரம்?

இங்கு தான் அவர்களோடு பேச வேண்டும், ஆழமாக பேச வேண்டும். “உன் சம்பளத்தில் வாடகை வீடு எடுக்க இயலுமா? அப்படி ஒரு வேளை வீடு வாங்கியருந்தால் கடன் கட்டியது போக வீட்டுச் செலவுக்கு எவ்வளவு தர இயலும்?” போன்றவற்றின் பதிலை பெறவேண்டும்.

இதற்கான தெளிவு படித்து, பட்டம் பெற்று, வேலைக்கு சென்று பெரிய பதவிக்கு ஆசைப்படும்

ஒருவருக்கு புரிந்து கொள்ள எத்தனை நாட்கள் வேண்டும்?

இப்பொழுது தான் வேலைக்கு செல்லும் பெண் வேண்டும், இத்தனை சம்பளம் வாங்கும் கணவன் வேண்டும் போன்ற விஷயங்களை தெளிவாக பேசுவார்கள். எத்தனை எதிர்பார்ப்புகளோடு வாழ்க்கையை ஆரம்பிக்கின்றார்கள் என்பது உங்களுக்கு புரியும்.

பண விஷயம் தான் பூதாகாரமாகும் பொழுது விவாகரத்து வரை எடுத்துச் செல்லும் என்பது புரிந்து திருமணம் பற்றி பேசுங்கள். இருவரின் சம்பளத்தில் என்ன “கமிட்மெண்ட்” – ஏற்கனவே உள்ளது? இவர்களின் சம்பளத்தில் தத்தம் குடும்பத்திற்கான வாக்குறுதிகள் என்ன? மணப் பெண்ணின் எதிர்பார்ப்புகள், மணமகனின் எதிர்பார்ப்புகள் என்று பல்வேறு விஷயங்களில் தெளிவு வேண்டும்.

ஜாதகம் சேர்ந்து விட்டால் மட்டும் போதாது. ஒருவருக்காக ஒருவர், தத்தம் குடும்பத்தாருக்காக எதை விட்டுக் கொடுக்க தயாராக உள்ளனர் என்பதெல்லாம் அவர்கள் உட்கார்ந்து பேசாமல், நிச்சயதார்த்தம் முடித்து விட்டு, நின்று போன திருமணங்கள் பல இன்று பெருகி வருகின்றன.

உங்கள் மகன் அல்லது மகளிடமிருக்கும் குடும்பம் நடத்த உதவாத சில குணங்களிருந்தால் அதை அவர்களுக்கு புரிய வைத்து, களைய உதவி செய்யுங்கள். அவர்களை பேச விடுங்கள். கேளுங்கள், குற்றங்களை குறித்துக் கொள்ளுங்கள். ஒன்றைமட்டும் புரியும்படி சொல்லுங்கள், “திருமணம் என்பது சுதந்திரமல்ல. சுதந்திரம் என்பது எதை வேண்டுமானாலும் செய்யலாம் என்பதல்ல. சில சட்டத்திட்டங்களுக்குள் வாழக்கூடிய சுதந்திரமான வாழ்க்கை தான். திருமண வாழ்க்கையின் அத்தனை

சட்டத்திட்டங்களையும் மிக அற்புதமான மந்திரங்கள் ஓதி அக்னி சாட்சியாக செய்வது நம் மரபு. ஒரே மாதத்தில் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை என்று பிரிவது போன்றவை நடக்காமல் பாதுகாப்பது அன்று போலவே, இன்றும் பெற்றோர்களின் முக்கியப் பணியாகும்.

இன்று இதை "வேண்டாத அர்ப்பணிப்பு", "எனக்கான "ஸ்பேஸ்" (Space) இல்லை", "தினசரி பொறுப்புகள் எனக்கு மூச்சு முட்டுது", "நான் உழைத்து, களைத்து வருகிறேன், அவளுக்கென்ன ஜாலியாக டி.வி. பார்த்துகிட்டு இருக்கிறாள்", "சம்பாதித்து கிழிச்சாரு அம்மா, அக்கான்னு பிடுங்கி திங்கறது தான் சரியாக இருக்கிறது" என்று எப்பொழுதும் குறைகள் தான் நாம் நிறைய கேட்கின்றோம்.

உங்கள் குழந்தைகள் இத்தகைய பேச்சுக்களின்றி வாழ்க்கையை நடத்த வேண்டும் எனும் எண்ணம் உங்களிடம் இருக்க வேண்டும்.

"எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் இல்லது அரண்.

(அதிகாரம் 75, குறள் – 750)

"அரண் அனைத்துச் சிறப்புகளையும் பெற்றிருக்கலாம். ஆனால் செயல் புரிபவர் சிறப்பானவர் இல்லையெனில் அரண் இருந்தும் இல்லாதது போன்றதாகும்" என்கிறார் வள்ளுவர் பெருமான்.

அரண் என்பதை உங்கள் குழந்தைகளின் திருமண வாழ்க்கை என்று கொண்டால் உங்களுக்கு பல விஷயங்கள் புரியும்.

தொடரும்...

# AURO MIRA MEDI AIDS

*House of Home Healthcare Products*

- ❖ Breast Pumps
- ❖ Blood Glucose Meters
- ❖ BP Meters
- ❖ Alpha Beds
- ❖ Adult Diapers
- ❖ Under Pads
- ❖ Wheel Chairs
- ❖ Physio Products
- ❖ Home Sleep Study
- ❖ Oxygen Concentrator
- ❖ CPAP / Bi Pap
- ❖ Pulse Oxymeters
- ❖ Nebuliser
- ❖ Morning Walker
- ❖ Weighing Scale
- ❖ Air Purifier




**முதியோர்களை சிறப்பாக பராமரிக்க தேவையான மருத்துவ உபகரணங்கள் எங்களிடம் சலுகைவிலையில் கிடைக்கும்.**

New No.36, Old No.32, Sriram Nagar Main Road,
Near I.I.T. Taramani, Chennai - 600 113.
**9382159199 | auromiramediaids@gmail.com**
**www.auromiramediaids.in**

# இராமாயணம் தரும் படிப்பினை

*சென்றமாத தொடர்ச்சி...*

அடுத்த முறை சுக்ரீவன் சண்டைக்குச் செல்லும் முன்பு அடையாளம் தெரிய சுக்ரீவன் கழுத்தில் மாலை ஒன்றைப் போட்டு அனுப்பினான். பிறகு நடந்த போரில் வாலி மீது ஒரு அம்பை எய்து ராமன் அவரைக் கொன்றான். அடிபட்ட வாலி ராம பாணத்தைப் பார்த்து ராமனிடம் கதறுகிறான், கத்துகிறான். நீ செய்தது அதர்மம். நான் உனக்கு என்ன தீங்கு செய்தேன், நான் சுக்ரீவனிடம் போர் செய்யும் போது மறைந்திருந்து நீ என் மீது பாணம் எய்தது என்ன நியாயம், தசரதன் மைந்தனா நீ, பரதன் அண்ணனா நீ, ஜானகி அருகே இல்லாததால் தர்ம நியாயத்தைக் கை விட்டாயா? நீ கருணை நிறைந்தவன் என நம்பினேன், தாரை சொல்லியும் கேட்காமல் நீ தர்மவான் என எண்ணி / நம்பி போருக்கு வந்தேன். ஏமாந்து விட்டேன் என்று புலம்பினான் வாலி, அப்போது இராமன் வாலியிடம் உனது ஆட்சி இஷ்வாகு குல ஆட்சிக்கு உட்பட்டது, நீ அதர்மி, தம்பியை அவமதித்தாய். தம்பி மனைவியை அபகரித்தாய். அதனால் நான் உன்னைத் தண்டித்தேன். அப்போது வாலி, மனித தர்மம் வேறு, விலங்கு தர்மம் வேறு என்று வாதிடுகிறான். அதற்கு ராமன் உனது செயல்கள் விலங்கு போல் உள்ளது, ஆனால் தர்மம் அறிந்த மனிதனைப்போல் அறிவுப்பூர்வமாகப் பேசுகின்றாய், ஒரு விலங்கு கூட உயர்ந்த வாழ்க்கை வாழ முடியும். மனிதன் கூட விலங்குகள் போல் நடந்து கொள்ள முடியும், எல்லோரும் விவேகமுடன், தர்ம நியதியுடன் வாழமுடியும். கஜேந்திரனை விலங்கு என்று கூறமுடியுமா? ஜடாயுவைப் பட்சி என்று கூறமுடியுமா? இரண்டும் அரிய செயல்கள் செய்து நல்ல கதியை அடைந்தது. இந்திரன் மகனாகப் பிறந்த நீ வந்த

காரியத்தை மறந்து இராவணனுடன் சேர்ந்து நட்பு பாராட்டிக் கொண்டிருக்கிறாய். பிறந்த நோக்கமே தவிடு பொடியாகிவிட்டது என்றார் ராமர்.

முதலில் வாலி, சுக்ரீவ உறவைப் பற்றி இலக்குவன் பேசும்போது, ஏன் இப்படி இருவரும் பகையாளிகள் போல் நடந்து கொள்கிறார்கள் என்று கேட்டான். அப்போது இராமன் எல்லோரும் பரதனைப் போல் இருந்து விட்டால் உலகமே ஸ்வர்க்கமாகிவிடும். பிறகு பரதனுக்கு உயர்வேது என்று கூறுகிறான். மேலும் சுக்ரீவனுடன் இணக்கமாக இருக்குமாறு தாரை வாலியிடம் வற்புறுத்துகிறாள். அவள் பேச்சைக் கேட்காததால் தான் வாலிக்கு இந்த நிலை வந்தது என்கிறார் இராமர்.

சிறிது சிறிதாக இராமரின் பேச்சை அசை போடுகிறான் வாலி; பிறகு இராமனிடம் மன்னிப்பு கேட்கிறான். அப்போது இராமன் அவனிடம் உனக்கு இன்னமும் உலகில் வாழ விருப்பம் என்றால் உனக்கு நான் நீண்ட ஆயுள் அளிக்கிறேன். சுக்ரீவனுடன் சேர்ந்து ஒற்றுமையாக ஆட்சி செய் என்கிறான். அப்போது வாலி என்றைக்கும் இந்த உடம்பு அழியக் கூடியது. ஆனால் உன் கையால் இப்படி எனக்கு மரணம் நாளை கிடைக்கும் என்பதில் நிச்சயமல்ல, அதனால் இந்த மரணம் மூலம் எனக்கு முக்தி கிடைத்துள்ளது. மறுபிறவி கிடையாது. நான் இப்போதே உயிர் துறக்கிறேன். அங்கதன் தாரை அழுது புலம்புகிறார்கள். இராமன், ஹனுமன், சுக்ரீவன் அவர்களைச் சமாதானப்படுத்துகிறான். வாலி கடைசியாக இராமனிடம் அங்கதனைப் பார்த்துக்கொள். சுக்ரீவன் ஏதாவது தவறு செய்தால் கூட எனக்காக மன்னித்துவிடு.

தொடரும்...

**- காந்தாமணி நாராயணன்**

**D. RAJAMOHAN**

**93455 55663**

**rajamohan@ipcomsystems.com**

**ipcom**

106A, Senguptha Street,
Ram Nagar,
Coimbatore - 641 009

**0422 4210033, 4210055**

www.ipcomsystems.com



♦ **Firewall** ♦ **Backup Solution** ♦ **AMC**

super market

B. Saravanan

Mob : +91 9894678762

rengas

Life is beautiful




A. Rangaswamy Chettiar Sons & Co.

108, DB Road, R.S. Puram,
Coimbatore - 641 002, TN, India

Tel : +91 422 4033908
Email : info@gengas.in
url : www.rengas.in

## வாழ்த்துக்கள்

*வேதபாரதியின் வேதவகுப்பு ஒருங்கிணைப்பாளர்*
*ஊரப்பாக்கம்*

**ஸ்ரீ சங்கரநாராயணன் - ஸ்ரீமதி மீனாட்சி**

*(ஸ்ரீ யக்ஞ சங்கரநாராயணன்) தம்பதியரின் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி சுபமுகூர்த்தம் திருநெல்வேலி தியாகராஜநகர், ஆஸ்திக சமாஜத்தில் 27.08.2024 செவ்வாய்கிழமை வேதோக்தமாக சிறப்பாக நடைபெற்றது. வேதபாரதியின் மனமார்ந்த வாழ்த்துக்கள்.*

---

*வேதபாரதியின் புரவலர் ஸ்ரீ* S.K.*சுப்ரமணியன்*
S.*அகிலாண்டேஸ்வரி அவர்களின் புதல்வி*

**S.உமா மகேஸ்வரி**,

*ஸ்ரீ பிச்சை ஹரிஹரன், ஸ்ரீமதி.பத்மாவதி குமாரன்,*
*சிரஞ்சீவி.***P.அஸ்வின்குமார்**

*ஆகியோர் திருமணம் சென்னை, அடையாறு* **ஸ்ரீ காஞ்சி மஹாஸ்வாமி அனந்த மண்டபத்தில் 15.09.2024, ஞாயிற்றுக்கிழமை** *அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. மணமக்கள் எல்லா வளமும் நலமும் பெற்று வாழ மகா ஸ்வாமிகளை ப்ரார்த்திக்கிறோம்.*

---

*ஊரப்பாக்கத்தில் 16.09.2024, திங்கள் நடைபெற்ற*
*வேதபாரதி உறுப்பினர்கள்*

**திரு.சந்திரசேகரன் - திருமதி. விஜயலட்சுமி**
**மற்றும் திரு.விஜயராகவன் – ஸ்ரீதேவி**

*அவர்களின் இல்லத் திருமண விழாவில் வேதபாரதியின் நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்தினார்கள். மணமக்கள் எல்லா நலமும் வளமும் பெற்று வாழ வாழ்த்துகிறோம்.*

## வேதபாரதி செய்திகள் புத்தக வங்கி கணக்கு எண்கள் விபரம்

**சந்தா விவரம்**

*வருட சந்தா ரூ.200*

*10 வருட சந்தா ரூ.1500*

*வங்கி மூலம் புத்தக சந்தா வழங்கிட*

**VEDABHARATHI SEITHIGAL**

**City Union Bank, Velachery Branch**

**A/c No. 510909010246740 | IFSC : CIUB0000262**

**80G Approved**

## புதிய கணக்கு எண்

## வேதபாரதி குருகுலம் ட்ரஸ்ட்

## வேதபாரதி - வேதவகுப்பிற்கான

## வங்கி கணக்கு எண்கள் விபரம்

| | | |
|---|---|---|
| Account No | : | 510909010268668<br>Current Account |
| IFSC Code | : | CIUB0000262 |
| Bank | : | City Union Bank |
| Branch | : | Velachery |

**80G Approved**


## ஸ்ரீ கோகுல கிருஷ்ணா கோசாலை

**ஸ்ரீ கிருஷ்ணாமிருதம் பப்ளிக் சாரிடபள் ட்ரஸ்ட்**

**(80 G Available)**

**756 பசுக்கள் பராமரிப்பு செய்யும் ஸ்தாபனம்**

1. கோ பூஜை செய்ய 2. கோ தானம் செய்ய
3. பசு பராமரிப்பு செய்ய
4. பிதுர்கள் திருப்தி அடைய – (மஹாளய பட்ச காலத்தில்)



பசு பாதுகாப்பு செய்வது கோடிபுண்ணியம்

தொடர்பு : **ஸ்ரீ நடராஜன்**

*ஊத்துக்கோட்டை, திருவள்ளூர் - 602 023*

**8940224744 / 9363111799**

# சென்னை திருமயிலை ஸ்ரீகபாலீஸ்வரர் திருக்கோயில்

**(செஞ்சொல்லரசு. மீ.சீனிவாசன், எம்.ஏ.எம்.எட்., பரமக்குடி)**

சென்றமாத தொடர்ச்சி...

ராஜகோபுரம் வழியே உள்ளே சென்றால் முதலில் நர்த்தன கணபதி தரிசனம், கூத்தாடும் கோலத்திலேயே விநாயகரைத் தரிசிப்பது இங்குச் சிறப்பாகும்.

அடுத்து உண்ணாமுலையாள் உடனாய அண்ணாமலையார் சந்நிதி உள்ளது. தெற்குப் பிரகாரத்தில் ஸ்ரீ சிங்காரவேலர் சந்நிதி உள்ளது. உள்ளே ஆறுமுகங்கள், 12 கரங்களுடன் மயில் மீது அமர்ந்த கோலத்தில் மேற்கு நோக்கிக் காட்சி தருகிறார். ஸ்ரீ சிங்காரவேலரின் இருபுறமும் யானையின் மீது அமர்ந்த கோலத்தில் வள்ளியும், தெய்வானையும் உள்ளனர். இச்சந்நிதியின் முன்புறம் 14 தூண்கள் கொண்ட ஒரு மண்டபம் உள்ளது. இதில் கொடிமரம், மயில், பலிபீடம் ஆகியவை உள்ளன.

ஸ்ரீ சிங்காரவேலரை, புரணி மாமகன், துடியேற்ற செங்கைக் கபாலிஸ்வரர் மைந்தன், விமலையின் பால் பெற்ற திருமகன், வாலிச் சரவணன், குசலர்க்கதிபதி, சங்கரன் பாலகன், மீனேறுயரிய காமார்க்கு மைத்துனன், விடையர் திருமகன், கார்த்திகைப் பெண் பாலுண்ட சிங்கார வேலன்; கந்தன் சேந்தன், ஆறுமுகன், என்றெல்லாம் போற்றுகின்றனர். அருணகிரிநாதர் இவரைப் போற்றி பலதிருப்புகழ் பாடல்கள் பாடியுள்ளார்.

தெற்குப் பிரகாரத்தில் வடக்கு நோக்கிப் பழநியாண்டவர், வாயிலார் நயினார் சன்னதிகள் உள்ளன. யோக நிலையில் அமர்ந்திருக்கும் வாயிலார்

சந்நிதி அம்பாள் சந்நிதியை நோக்கி உள்ளது.

இதையடுத்து 12 கால் மண்டபம், நவராத்திரியின் போது ஸ்ரீ கற்பகாம்பாள் இங்கு கொலுவிருப்பாள். பிரதோஷத்தில் இந்த மண்டபத்தில் இருந்துதான் உற்சவ மூர்த்தி திருவுலா செல்வார். விழாக்காலங்களில் இங்கு சமயச் சொற்பொழிவுகள் நடைபெறும்.

இம்மண்டபம் கற்பகாம்பாள் சன்னதிக்கு நேர் எதிரில் உள்ளது. அருகே வில்வமரமும் நூலகமும் உள்ளது. மேற்குப் பிரகாரத்தில் அருணகிரிநாதர் சன்னதி உள்ளது. இதையடுத்து மேற்குக் கோபுரவாயில், இதன் வடப்பக்கம் ஸ்ரீ கற்பக விநாயகர், ஸ்ரீ பாலமுருகன் சன்னதிகள் உள்ளன.

ஸ்ரீ கபாலிஸ்வரர் சன்னதிக்கு எதிரே கொடிமரம் அருகே பூம்பாவை திருஞான சம்பந்தர் சந்நிதி.

வடக்குப் பிரகாரத்தில் பசுமடம், வாகன அறைகள், மடப்பள்ளி ஆகிய உள்ளன. ஸ்ரீ புன்னை வனநாதர் சந்நிதி உள்ளன. அருகில் தலமரம் புன்னைமரம் உள்ளது. அம்பாள் மயில் வடிவில் இருப்பதை இங்கு காணலாம்.

ஈசான மூலையில் சனீஸ்வரருக்குத் தனிச்சன்னதி உள்ளது. இதனருகில் உற்சவ மூர்த்திகளின் கொலுமண்டபம் உள்ளது.

கிழக்குச் சுற்றில் ஸ்ரீ சுந்தரேஸ்வரர், நவக்கிரகங்கள் ஸ்ரீ மீனாட்சி சுந்தரேஸ்வரர், ஜெகதீஸ்வரர் சன்னதிகள் உள்ளன.

மகாமண்டபத்தின் தெற்குப் புறத்தூணில் ஸ்ரீராமர், லட்சுமணர், சீதை, அனுமன் திருவுருவங்கள் உள்ளன.

கயிலையே மயிலை! மயிலையே கயிலை!

தொடரும்....

# அயோத்தி - குழந்தை ராமரின் அற்புத தரிசனம் – 5



அயோத்தியில் குழந்தை ஸ்ரீ ராமரை தரிசித்துவிட்டு, ஹனுமன் கரி, கனக்பவன், ஸ்ரீ வால்மீகிபவன் ஆகிய முக்கிய இடங்களின் தரிசனங்களையும் முடித்துவிட்டோம். தசரத் தர்பார் தரிசிக்க புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம். இதற்கிடையே நம் மனதில் ஏதோ ஸ்ரீ ராமாயண காலத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருப்பது போல நிறைவான உணர்வு ஏற்பட்டுவிடுவதை நாங்கள் எல்லோருமே உணர்ந்தோம். அதற்கு மிக முக்கிய காரணம் இந்த இடங்கள் மட்டுமல்ல. இங்கே வசித்துக் கொண்டிருக்கும் மிக எளிமையான, பக்தி பூர்வமான மக்கள்தான் காரணம் பகவான் ஸ்ரீ ராமர் மீதும் சீதா மாதா மீதும் தங்கள் உயிரையே வைத்திருக்கும் மக்கள் இவர்கள் என்பதை நாம் பரி பூரணமாக உணரமுடிகிறது. இதே உணர்வை நான் 2000-ம் ஆண்டில், இருபதுக்கும் மேற்பட்ட அயல் நாட்டு எழுத்தாளர்கள் மற்றும் ஆறு இந்தியப் பத்திரிக்கையாளர்களுடன் உத்திரபிரதேசத்தின் சுற்றுலா துறையின் அழைப்பாளராகவும் தமிழகத்தின் பத்திரிகை பிரதிநிதியாகவும் உத்திரப் பிரதேசத்திலுள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க ஸ்தலங்களுக்கு பயணப்பட்டபோது உணர்ந்தேன். குறிப்பாக, ஹரித்துவார், ரிஷிகேஷ், வாரணாசி, சித்திரகூடம்

ஆகிய இடங்களில் மக்களின் பக்தி உணர்வை நேரில் கண்டு வியந்து போனோம். ஆண்டுகள் பல கழிந்த போதும், மக்களிடம் அதே பக்தி உணர்வு தொடர்ந்து கொண்டிருப்பதை இங்கே, அயோத்தியில் அனுபவித்தேன்.



அயோத்தியின் மத்திய பகுதியில், ஹனுமான் கரிக்கு அருகில் **தசரத் மஹால்** அமைந்து இருக்கிறது. குறுகிய சாலைகளில் மக்கள் கூட்டத்தில் நீந்தி தான் செல்லவேண்டியிருந்தது. முகப்பு வாயில், பல வர்ண பூச்சுகளுடன், சற்றே களை இழந்த தோற்றத்தில் காணப்பட்டாலும் ஸ்ரீ தசரத மகாராஜாவின் காலத்தில் மிகவும் கம்பிரமான அரண்மனையாக இருந்திருக்கும் என்பதை நம்மால் கற்பனை செய்து பார்க்க முடிகிறது. ஸ்ரீ ராமர் தன் உடன் பிறப்புகளுடனும், பாசமிக்க தந்தை தாய்மார்களுடனும் இன்ன பிற உறவினர்களுடனும் மகிழ்ச்சியுடன் கழித்த நினைவுகளைத் தாங்கி நிற்கிறது. இதன் சுவர்கள். இன்று பொதுமக்களால் “படாஸ்தான்”, “படிஜஹா” என்று அதாவது மிகப்பெரிய ஸ்தலம். இடம் என்று பொருள்படும்படி அழைக்கப்படுகிறது. ஸ்ரீ ராமர் வாழ்ந்த இந்த இடம் இன்று பக்தர்கள் உயிராய் நேசிக்கும் ஸ்ரீ ராம் பரிவார் ஆலயமாக விளங்குகிறது. இது தசரதர் காலத்து அதாவது திரேதாயுகத்து அரண்மனை இல்லை என்றும் பின்னர் புதுப்பிக்கப்பட்டஸ்தலம் என்றும் வரலாறு கூறுகிறது.

ஆகவே தசரத மகாராஜாவின் அரண்மனை இவ்வளவு சிறியதா என்று எண்ண வேண்டாம். அதே இடத்தில், அதன் அடையாளமாகப் பிற்காலத்தில் புதுப்பிக்கப்பட்ட ஸ்தலம் என்றேஅறிந்து கொள்ள முடிகிறது. எப்படியாயினும் பக்தி உணர்வுதானே முக்கியம்! எனவே, ஸ்ரீ ஹனுமன் சமேத ஸ்ரீ ராம சீதா லஷ்மண், பரத சத்ருகணன் ஆகியோரை நம் மனதில் இருத்தி பிரார்த்திப்போம்.

நாங்கள் உள்ளே நுழைந்த போது, மிகவும் அழகாக அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீ ராமர் தன் பரிவாரங்களுடன் குடியிருக்கும் கோவிலாக இருந்தது. அவர்களுடன் பல்வேறு குருமார்கள், தெய்வங்களின் உருவச் சிலைகளும் அலங்கரிக்கப்பட்டும் பூஜிக்கப்பட்டும் இருந்தன. காவி வஸ்திரம் உடுத்திய பண்டிட்கள் சிலர், வால்மீகி ராமாயணத்திலிருந்து ஸ்லோகங்களை வாசித்துக் கொண்டே இருந்தனர். இந்த வாசிப்பு இங்கே தொடர்ந்து நடந்து கொண்டே இருக்கும் என்றார்கள். பொதுமக்களும் உள்நுழையும் போதே, ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்திக்கி ஜெய் என்றும் ஸ்ரீ சீதா மாதா கி ஜெய் என்றும் கோஷங்களை எழுப்பிக்கொண்டே வந்து தரிசனம் செய்தார்கள். உணர்ச்சி வசப்பட்டார்கள். தீர்த்த பிரசாதங்களையும் புஷ்ப பிரசாதங்களையும் பயபக்தியுடன் ஏற்றுக்கொண்டார்கள். சிலர் பண்டிட்களின் கரங்களால், சிவப்பு நிறஸ்ரீ ராம் ரக்ஷை கயிறுகளை ஆண்களும், மஞ்சள் நிற, ஸ்ரீ சீதா மாதா கயிறுகளைப் பெண்களும் கட்டிக்கொண்டும், பெற்றுக் கொண்டு, ஒரு பத்து ரூபாய் காணிக்கையாக செலுத்திவிட்டுச் செல்வதை நான் கவனித்தேன். எங்கும் பக்திப் பிரவாகம். நாங்களும் ஒரு சில மணித்துகள்கள்

அங்கேயே அமர்ந்து ஸ்ரீ ராம் பரிவார் மூர்த்தங்களை தரிசித்துக் கொண்டே, ஸ்ரீ ராமநாமத்தை உச்சரித்துவிட்டு, அந்த சன்னதியிலிருந்து நகருவதற்கு மனமில்லாமல் வெளியே வந்தோம். அடுத்து சரயு நதிக்கரைக்கு செல்லவேண்டும் என்பது அனைவருக்கும் விருப்பமாக இருந்தது. குழுவில் சிலருக்கு பசி ஒருபக்கம், அதனால் ஏற்பட்ட கோபம் ஒரு பக்கம். ஆகவே சில மணிநேரங்கள் மனதின் பக்தியை ஒதுக்கி வைத்துவிட்டு, வயிற்றைகவனித்தோம்.

அடுத்த இதழில், பார்த்து அனுபவித்த சரயு நதிக்கரையையும், கேட்டுப் பரவசப்பட்ட ஆனால் பார்க்க முடியாமல் போனதும், கண்டிப்பாக பார்க்க வேண்டிய ஸ்தலமுமான தசரத மன்னரின் சமாதி (சமாதி என்று சொல்லலாமா தெரியவில்லை. ஆனால் இதனை "சமாதி ஸ்தல்" என்றே குறிப்பிடுகிறார்கள்) இடத்தைப் பற்றியும் எழுதிவிட்டு இந்தத் தொடரை நான் முடித்துக் கொள்கிறேன்.

ஜெய் ஸ்ரீராம்! ஜெய் சீதா ராம்!

தொடரும்...

99940 89133



99940 89140

SRI SASTHA CATERING



We are Supplying Meals,
Tiffin & Marriage Sear
Variation in Order



28, Senthuran Colony, 2nd Street, Muvarasempet, Madipakkam, Chennai - 91

# வேதவகுப்பின் அனுபவங்கள்

கடந்த 3 வருடங்களில் வேதபாரதியுடன் நான் மேற்கொண்ட பயணம் திரும்பிப் பார்க்கையில், அது உண்மையிலேயே செழுமையான அனுபவம் என்பதை என்னால் நேர்மையாக ஒப்புக் கொள்ள முடிகிறது. எனக்கு இப்போது 61 வயது ஆகிறது. நான் கற்கத் தொடங்கிய போது எனக்கு வயது 58. எனது ஆர்வத்தை அறிந்த நண்பர் ஒருவரிடமிருந்து தற்செயலாக ஒரு Google Form படிவ இணைப்பைப் பெற்றேன். அதிகம் எதிர்பார்க்காமல் படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பித்து மறந்துவிட்டேன். ஏறக்குறைய இரண்டு மாதங்களுக்குப் பிறகு, முதல் வகுப்பு சனிக்கிழமை என்று எனக்கு ஒரு செய்தி வந்தது. நான் மும்பையில் சேவையில் இருந்ததால் வார இறுதி வகுப்புக்களைத் தேர்ந்தெடுத்திருந்னே். 35 வருட இடைவெளிக்குப் பிறகு மீண்டும் வேதம் கற்கத் தொடங்கினேன். எனக்கு Whatsapp மூலம் Google Form கிடைக்க வேண்டும். அதை பெற்றபின் அதனை உடனே பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும். அதன் மூலம் நான் வேதம் கற்றவேண்டும், அதுவும் வயது முதிர்ந்த காலத்தில் என்பது தெய்வ சங்கல்பம் ஆக இருந்து இருக்க வேண்டும்.

கடந்த 3 வருடங்களில் நான்கு குருக்கள் எனக்குக் கற்றுக் கொடுத்திருக்கிறார்கள். முதல் குருவின் பெயர் எனக்கு நினைவில் இல்லை என்றாலும், வகுப்பில் எனக்கு அறிமுகப்படுத்தப்பட்ட மற்றமூவரும் ஸ்ரீ ராஜா குருஜி, ஸ்ரீ கைலாச கணபாடிகள் குருஜி மற்றும் ஸ்ரீ விக்னேஷ் கணபாடிகள் அவர்கள் ஒவ்வொருவரும் வித்வத்தில் மிக உயரமானவர்கள். இதில், இணை ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ வெங்கடகிருஷ்ணன் அவர்களின் பங்களிப்பு மிகவும் பாராட்டத்தக்கது.

இனி வரும் காலங்களில் வேதபாரதியின் ஆன்லைன் வகுப்புகள் மூலம் அதிகமான இளைஞர்கள் பயனடைவார்கள் என்று நம்புகிறேன். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்த தனித்துவமான பாரம்பரியத்தை எதிர்காலத்திற்கு எடுத்துச் செல்வது நம் பொறுப்பு.

**ரா.ஸ்ரீதர் (முன்பு மும்பையில் இப்போது சென்னையில்)**

## தர்மபுரி மாவட்ட வாசகர் கடிதம்

**ஸதாசிவ சமாரம்பாம் சங்கார்சார்ய மத்யமாம்**
**அஸ்மத் ஆச்சார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்**

*வேதபாரதி இதழ் தன் பெயருக்கு ஏற்றபடி நமது வேதங்களில் சொல்லப்பட்ட விஷயங்களை சுருக்கமாக ஆனால் ஆணித்தரமாக ஆதாரத்துடன் எடுத்து இயம்புகிறது.*

*மாதம் ஒரு வேத மந்திரத்தில் தொடங்கி நமது பொக்கிஷமாம் ஸ்ரீமத் பாகவதம், ஸ்ரீமத் பகவத்கீதை ஆகியவற்றிலிருந்து ஒரு ஸ்லோகத்தை எடுத்து விரிவாக விளக்கி பொருள் தருவது சால சிறந்தது. மேலும் அறுபத்து மூவர் சரித்திரம் நமக்கு ஏற்கனவே தெரிந்தவற்றைநினைவில் கொள்ள ஏதுவாக உள்ளது.*

*தர்மத்தின் குரல் மூலமாக ஆச்சாரியாரின் தர்ம விசாரணை நம்மை நல்வழிபடுத்துவதாக உள்ளது. மேலும் புஷ்பங்கள், தாருக்கள் பற்றிய பார்வை வித்தியாசமாகவும், அறிவியல் பூர்வமாகவும் உள்ளது. இதில் பல்வேறு ஆச்சாரியர்களின் மடங்கள் சார்ந்த அறிவிப்புகள் வெளியிடுவது சிறப்பானது.*

*இந்த சேவை பாரத நாட்டிற்கு அதன் கலாச்சாரத்தை பேணிப்பாதுகாக்க நல்லதொரு முயற்சி என்பது ஐயமில்லை. இம்முயற்சி மேன்மேலும் பல்லாண்டு தொடர தர்மபுரி மாவட்டத்தின் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறோம்.*

**கோ.சீனிவாசன்,** *ஆயுள் உறுப்பினர்*
*தர்மபுரி - 9443263910*

---

**கோடீ காயத்ரீ ஜப யக்ஞம், திருச்சி**

*நாள் : 29, 30.12.2024, சனி & ஞாயிறு*

*பங்கேற்க விரும்புபவர்கள் அனுகவேண்டிய*

*தொலைபேசி எண் :* **9443453053 / 9443143697**

அருள்மிகு ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை சுவாமி துணை
அருள்மிகு ஸ்ரீ சிவந்தி வினாயகர் சுவாமி துணை

**தங்களின் வளம், நலம் விரும்பும்,**
**நிறுவனங்கள் என்றும் என்றென்றும்**

என்றும் டாக்டர் சீட்டில் எழுதி உள்ளபடி சரியான மருந்துகள் கிடைக்கும் இடம் 40 வருடங்களுக்கு மேலான அனுபவங்களுடன் தங்களின் அன்றாட மற்றும் மாதாந்திர மருந்துகள் முழுமையான தேவைக்கு உங்கள் அருகாமையில்

# துளசி மெடிக்கல்ஸ்
# TULASI MEDICALS



*31, 4வது மெயின் ரோடு, நங்கநல்லூர், சென்னை – 61.*

**✆ : 94449 63708, 94454 51450**


**தள்ளுபடிக்காக மாற்று மருந்துகளை வாங்காதீர்கள்**

**FREE HOME DELIVERY**

**கடைகளுக்கு செல்லும்போது கையில் துணிப்பையுடன் செல்வோம்.**

---

# வாழ்க வளமுடன் சிற்றரங்கம் A/c
# VAZHGA VALAMUDAN MINI MAHAL A/c





**MINI MAHAL FOR MINI FUNCTIONS**



*8/11, 27வது தெரு, நங்கநல்லூர், சென்னை – 61.*

***உங்கள் இல்லத்தில் நடைபெறுகின்ற அனைத்து சுபநிகழ்ச்சிகளையும் சிறந்த முறையில் நடத்திட தொடர்பு கொள்ளவும்***

**✆ : 94449 63708, 97911 66989**

**வாழ்க வளத்துடன்! வாழ்க நலத்துடன்!!**
**வாழ்க மகிழ்வுடன் !!!**


Rs.1000
inclusive of
tax
Wopper
COMBO OFFER
This pack contains:
Liquid Detergent 1 L - 1 No
Floor Cleaner 500 ml - 2 Nos
Toilet Cleaner 500 ml - 2 Nos
Fabric Conditioner 500 ml - 1 No
Vessel Wash 500 ml - 1 No
Multipurpose Cleaner 100 ml - 1 No
Hand Wash 100 ml - 1 No
Hand Rub 100 ml - 1 No
FREE
Contact
9952972436 / 7824807801
Shri Meera Labs Pvt Ltd
WOPPER

## திரைகடல் ஓடி

“இந்த பாடாவதி ரிமோட்டை எப்படி சரி செய்யறதுனே தெரியலையே” என அலுத்துக் கொண்டார் லட்சுமி மாமி.

“இரு இரு நான் பார்க்கிறேன்” என ரிமோட்டை வாங்கி அதன் தலையில் நான்கு முறை தட்டினார் சுந்தரம் மாமா.

இவர்கள் இருவரையும் பார்த்து பாவப்பட்ட ரிமோட் தானே வேலை செய்ய தொடங்கியது.

சங்கரா டிவியை தேடி போட்டுவிட்டு வீட்டுக்குள்ளேயே குறுக்கும் நெடுக்கும் நடக்க ஆரம்பித்தாள் மாமி. மாலை ஆறு மணி தொலைபேசி அழைப்பிற்காக ஐந்தரை மணியிலிருந்தே காத்துக் கொண்டிருந்தாள். சுந்தரம் மாமாவிற்கு லட்சுமி மாமிக்கும் ஒரே மகள், சுஜா. சுஜாவிற்கு கல்யாணமாகி அமெரிக்காவிற்கு சென்று பதினைந்து வருடங்களுக்கு மேலாகிறது. இந்த பதினைந்து வருடங்களில் மாமாவும், மாமியும் சுஜாவின் குழந்தைகள் பிறப்பிற்காக இருமுறை சென்று வந்துள்ளனர்.

ஞாயிறு தவிர எல்லா நாட்களிலும் இந்திய நேரம் ஆறு மணிக்கு சரியாக சுஜா அழைத்துவிடுவாள். வாட்ஸாப் வந்தபிறகு அழைப்புகள் சற்றே எளிதாகிப் போனது. பேரன்கள் இருவரும் அவ்வப்போது தலையை காமிப்பார்கள். வளர வளர அவர்களது அமெரிக்க ஆங்கிலம் கலந்து செந்தமிழ் சற்றும் புரிவதில்லை மாமிக்கு.

மாமாவிற்கோ வெறும் சைகை பாஷை தான். தொலைபேசியில் எவ்வளவு சத்தமாக பேசினாலும் விளங்குவதில்லை, முகத்தைப் பார்க்கும் சிறு சந்தோஷம் மட்டுமே.

இவர்கள் பேசி முடிக்கவும் நரசிம்மன் கதவைத்

தட்டவும் சரியாக இருந்தது.

"உள்ளே வாங்கோ" என அழைத்தார் மாமா.

"சௌகர்யம் தானே" என்றார்.

நரசிம்மன், சுந்தரம் மாமாவின் தூரத்து உறவினர். ஒரு கிலோமீட்டர் தொலைவில் இருக்கிறார். மாதம் ஒரு முறையோ இரு முறையோ இவர்களை வந்து சந்தித்துவிட்டுப் போவார். நரசிம்ம அவதாரத்திற்கு சற்றும் சம்பந்தம் இல்லாத வகையில் வாமன அவதாரம் போல இருப்பார். கொஞ்சம் சிந்தனைகள் மாறுபட்டு இருக்கும், உலகின் எல்லா பிரச்சனைகளுக்கும் ஒரு தீர்வு இருக்கும் அவரிடம்.

"எல்லாரும் நல்லா இருக்கா நரசிம்மன், இப்போதுதான் சுஜா போன் பண்ணினா. இந்த வாரம் பூரா ஒரு எல்டர்ஸ் ஹோம்ல உதவி பண்றாளாம்",

"ஓ சரி, அங்கே எந்த மாதரி உதவியாம்?"

"அங்கே தங்கி இருக்கிற வயசானவா கிட்ட போய் வேண்டியதை பண்ணி தறதாம், அதாவது ஷாப்பிங் கூட்டிண்டு போறது, கவர்மெண்ட் வேலைகள், அவா கூட சேர்ந்து விளையாடறது, இல்ல பேசிண்டு இருக்கலாமாம், ஒரு சோசியல் சர்வீஸ் மாதிரி. அங்கே பிள்ளைகள் இல்லாமல் தனியா நெறைய வயசானவா இருக்கா இல்லையா!"

தொடரும்...

**வெ. சிவசங்கரி**

**பெரியவர்களுக்கு** ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்திரமும், ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமமும் நடந்து கொண்டு இருக்கிறது.

**குழந்தைகளுக்கு** ஸ்ரீ மாத்ருகா பஞ்சகம், சிவ வாக்கிய பாடல் நடந்து கொண்டு உள்ளது.

ஆசிரியர் : ஸ்ரீ முரளிதரன்,
ஸ்ரீமதி நீலா முரளி, மதுரை
தொடர்புக்கு : **9443489129**

# RAJA AND KUMAR

## CHARTERED ACCOUNTANTS

35/46-1, Mayuranathar
Mela Madavilagam,
Mayiladuthurai - 609 001
Ph : 04364 226694

வேதபாரதி செய்திகள் பத்திரிக்கை
11-ம் ஆண்டு சிறப்பிதழுக்கு
எங்கள் வாழ்த்துக்கள்.

**BRANCH OFFICE :**
Flat No.1, Naiganesh Flats,
Race Course Colony Main Road,
Guindy, Chennai - 600 032.
**Cell : 7338812020**

# MAYURA TECHNICAL INSTITUTE




**K. RAMANI**
**Cell : 9894051835**


"ஈஸா வாஸ்யமிதம் ஸர்வம் யத்கிஞ்ச ஜயத்யாம் ஜகத்" - யஜுர் வேதம் 40.1

விளக்கம் : உலகில் உள்ள அனைத்திலும் ஆண்டவனே உறைகிறார். அவரே அகில உலகமாகவும் பரவி நிற்கிறார்.


## வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்

No.42, South Saliya Street, Mayiladuthurai - 609 002.

வேதபாரதி ஆன்மீக அமைப்பு நடத்தும்
வேதபாரதி செய்திகள் 11-ம் ஆண்டு
சிறப்பிதழுக்கு எங்கள் வாழ்த்துக்கள்.

ரிலையன்ஸ்
டிராவல்ஸ் & டிரான்ஸ்போர்ட்

| | | | |
|---|---|---|---|
| திருவாரூர் | - | சென்னை இரவு | 9.45 |
| வேதாரண்யம் | - | சென்னை இரவு | 8.30 |
| சென்னை | - | திருவாரூர் இரவு | 10.00 |
| சென்னை | - | வேதாரண்யம் இரவு | 9.00 |

திருமணம், சுற்றுலா செல்ல ஸ்பேர்
A/c & Non A/c., பஸ் பஸ்கள் வாடகைக்கு கிடைக்கும்

தொடர்புக்கு : 99400 50822, 94430 71776


Study Aviation / Tourism / Air Cargo
at SIMS in association with SACCA.

SOORYA INSTITUTE
of Management studies

Get International Certification in
Aviation / Tourism / Air Cargo



3rd Main Road, Mahavir Nagar, Lawspet, Pondy-8.
92442 22285, 92442 22280 info@sims.net.in


MSH
SINCE 1961
SILK MARK
முதல் மாடியில்
திருமணத்திற்கான
பட்டு புடவைகளுக்கு
பிரத்தியோகமான
பிரிவு
Fashionable
Silk Sarees, Ready-Mades
& All Kinds of Textiles
முத்து சில்க் ஹவுஸ்
MUTHU SILK HOUSE
(Near Raja Theatre Signal) (வேறு எங்கும் கிளைகள் இல்லை)
314, J.N.Street, Pondicherry - 1. Ph: 2334298, 2333541. Fax: 2222142

SRI MAHAA ENTERPRISES

Cutcherry Road, Mayiladuthurai

வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்

Samsung Mobile Distributor



Dealer in :

❀ Arun Icecream ❀ Hatsun Foods



Venkataraman (a) Babu : 9442452710 / 9486963646

ANANTHI Super Market

No.4, 4th Main Road, Nanganallur, Chennai-61 (Near by Sivan Temple)

C. Ranjith Babu
91767 74587
GST : 33AQVPC1989M1Z5

FREE HOME DELIVERY



for Whatsapp Order 87788 90191



Sri Arumugam Thunai

வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்



M.C.A. EXPORT FABRICS
(Export Quality Home Textiles Products)
54, Sengunthapuram 5th Cross,
Karur - 639 002. Tamilnadu. South India.



Mobile : 094431 31608 | 094434 41183 | 098948 47029
E-mail : mcaexport1973@gmail.com

வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்

# METTUPAKKAM FOUNDATIONS PVT. LTD.

United India Colony, Kodambakkam,
Chennai, Tamil Nadu 600024

## Building your dream

*Collaborate with us and build you dream home..*
*we create homes... not just buildings.*

## Our Projects :

**Kovilambakkam**



**Kodambakkam**





**044 4211 6844 | https://g.co/kgs/vBg9cyf**

Sri Ramajayam



நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்ப துன்னை
என்றும் வணங்குவ துன்மலர்த்தாள்.

அபிராமி அந்தாதி 10.

K.S. MUTHUSAMY IYER SONS &
R.V. VENKATRAMA IYER

Maligai Merchants








வேதபாரதிக்கு
வாழ்த்துக்கள்

Railady, Mayiladuthurai - 609 003.
Tel : Ganesar - Ph : 222232


Athi Varadhar Dry Fruits
அத்தி வரதர்
உலர் பழங்கள்
எங்களிடம் பிரீமியம் மற்றும் தரமான உலர் பழங்கள் மிகவும் மலிவு விலையில் உள்ளன, சந்தை விலையை விட குறைவானது மற்றும் தரம் சிறந்தது
நீங்கள் whatsapp மூலம் ஆர்டர் செய்யலாம்
8072663795
69B/1,East Raja Street, Kanchipuram 631502.
• பாதாம்
• முந்திரி
• திராட்சை
• வால்நட்
• குங்குமப்பூ
• கருப்பு திராட்சை
• பேரீச்சம்பழம்
• பாதாம் பழம்
• பாதாம் பிசின்
• தாமரை விதை
• அல்பகோடா
• ஏலக்காய்
• குல்கண்ட்
• சிறுதானியம்
• பிஸ்தா
• அத்தி
• உலர் மாம்பழம்
• உலர் கிவி
• உலர் ஸ்ட்ராபெர்ரி
• உலர் செர்ரி
• உலர் அன்னாசிப்பழம்
• சூரியகாந்தி விதை
• பூசணி விதை
• சப்ஜா விதை
AV_DRYFRUITS
SCAN ME
ரூ.1000 க்கும் மேல் வாங்கும் போது,
5% தள்ளுபடி பெறுங்கள்!

## வேதவகுப்பு அனுபவம்

வேதபாரதியுடன் எனது பயணம் மறக்க முடியாத அனுபவம். என்னை சூக்தங்களை ஸ்வரத்துடன் சொல்ல பழக்கியது வேதபாரதி என்பதில் ஐயமில்லை. இவை அனைத்தும் வழி நடத்தி செல்லும் ஸ்ரீ மஹா குருஜி மற்றும் வகுப்புகளை நடத்திவரும் ஸ்ரீமான் விக்னேஷ் கனபாடிகளின் பங்களிப்பினால் என்பதை மறக்கவும் மறுக்கவும் இயலாது.

அனைத்திற்கும் மேலாக ஸ்ரீ மஹா குருஜியின் வழிகாட்டுதலில் தைத்ரீய உபநிஷத்திற்கு அர்த்தம் பதிய வாய்ப்பு கிட்டியது. வேதபாரதிக்கும், மஹா குருஜி உள்ளடக்கி அனைத்து குருமார்களுக்கும் என் நமஸ்காரங்களையும் கிருதக்ஞையும் தெரிவித்துக்கொள்கிறேன். **V. வரதராஜன்**

## ஸ்லோக வகுப்பு அனுபவம்

நமஸ்காரம் மாமா மற்றும் மாமிக்கு, நாங்கள் மாமா & மாமியிடம் கற்றுக்கொண்ட ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்ம ஸ்லோகத்தை திருச்சி, காவேரிகரை அருகிலுள்ள (புதுப்பாலம் கீழ் உள்ள) ஸ்ரீ லக்ஷ்மி நரஸிம்மர் கோவில் போகும் போது ராகமாக பாடியதை இப்போது கோவிலிலும் சிலர் பாடுகிறார்கள். ராம் ராம்.

மாமா & மாமிக்கு எங்கள் ஆசீர்வாதங்கள்.

வேதபாரதிக்கு இவர்கள் இருவரும் ஒரு முத்தான சொத்து. **திருச்சி K. கணேசன் & மீனலோசனி.**

---

வேதபாரதி மூலம் நான் மாமி மற்றும் மாமாவிடம் நல்ல ஸ்லோகங்கள் கற்றுக்கொண்டேன். தினசரி எனக்கு ஸ்லோகங்கள் பாராயணம் செய்ய மிகவும் வசதியாக உள்ளது. ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அஷ்டகம் குருவந்தனம் போன்றபல ஸ்லோகங்களை மாமியிடம் கற்றது எனக்கு மிகவும் பயனுள்ளதாக பாராயணம் செய்ய வசதியாக உள்ளது. நன்றிகள் மற்றும் எனது பணிவான நமஸ்காரங்கள். **N. AMUDHA - BHAVANI**

வேதபாரதிக்கும், குரு தம்பதியருக்கும் (திரு.முரளிதரன், திருமதி.நீலா முரளிதரன்) என் நமஸ்காரம்.

நான் சுப்புலட்சுமி வெங்கட் நரசிம்மன், குரோம்பேட்டை, சென்னையில் உள்ளேன். கனகதாரா ஸ்லோகம் வகுப்பிலிருந்து தவறாமல் வருகிறேன். ஆன்மீக ஈர்ப்பு அதிகம் உள்ளது. குருமாமி இனிய, எளிய ராகத்தில் சொல்லித்தருவதாலும், குருமாமாவின் எளிய பாஷ்யத்தாலும் ஸ்லோகங்கள் எளிதில் மனனம் ஆகிறது.

வகுப்பு நடக்கும் 1 மணி நேரம் வேறு சிந்தனையே கிடையாது. அவ்வளவு மகிழ்ச்சி, குழந்தைகளுக்கான வகுப்பில் பேரன் கற்றுக்கொள்கிறான்.

குழந்தைகளுக்கும், பெரியவர்களுக்கும் எண்ணில்லா அறிவுரைகளும் கிடைக்கிறது. நிறைய ஸ்லோகங்கள் கற்றுக் கொள்ள வாய்ப்பு தருகிறவேதபாரதிக்கும், குரு தம்பதியருக்கும் நன்றி.

இவர்கள் சேவை என்றென்றும் தொடர இறைவனையும், மகாபெரியவரையும் வணக்குகிறேன். இந்த குரு தம்பதியருக்கும், வேதபாரதி குடும்பத்தினருக்கும் எல்லா வளங்களும் கிடைக்க பிராரத்தக்கிறேன்.

வாழ்க வளமுடன், வாழ்க பல்லாண்டு.

**சுப்புலட்சுமி வெங்கட் நரசிம்மன்.**

---

I really feel blessed to be part of this satsang being conducted by selfless service minded souls and wish to be part of them forever. Koti koti pranams to one and all!

**Anu Venkat,** Ashok nagar, Chennai - 83

# விஸ்வரூப யாத்திரை 2024

18.09.2024, புதன்கிழமை காஞ்சிபுரம் ஓரிக்கையில் நடைபெற்ற ஸ்ரீ சங்கர விஜயேந்திர சரஸ்வதி சங்கராசார்ய ஸ்வாமிகளின் சாதுர்மாஸ்ய விரத பூர்த்தி விஸ்வரூப யாத்திரை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இதில் அனைத்து தெய்வங்களின் வீதி உலாவினை பின் தொடர்ந்து இந்த யாத்திரையானது நடைபெற்றது. இதில் வேதபாரதி ஊரப்பாக்கம் அமைப்பின் மகளிர் அணியினர் சார்பாக நடைபெற்ற கோலாட்டம் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மறைமலை நகர் பிராமண சங்கம், கூடுவாஞ்சேரி பகுதிகளில் உள்ள இந்து சமய மன்றத்தினர் ஆண்கள் உட்பட 100க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். யாத்திரையின் வழி நெடுங்கிலும் நமது கலாச்சாரம், பண்பாட்டை போற்றும் விதமாக அமைந்த கலைநிகழ்ச்சிகள் அனைத்தையும் கண்டு ஸ்வாமிகள் மிகவும் பெருமிதம் அடைந்தார்கள். இதில் கலந்து கொண்ட அனைவருக்கும் இரவு சிற்றுண்டி மற்றும் பிரசாதங்கள் வழங்கப்பட்டன.



# தருவின் நிழலில்

## இலந்தை (ZIZIPHUS JUJUBA)

தமிழகத்தின் கிராமங்கள்தோறும் எங்கும் பரவிக் காணப்படும் இலந்தை பாரதத்தின் தமிழகம் பூர்வீகமாக சொல்லப்படுகிறது. என்றாலும் சீனாவிலும் இவை அதிகளவில் இருப்பதால் சீனாவும் இதன் பூர்வீகமாக சொல்லப்படுகிறது.

சுமார் 15 மீட்டர் வரை உயரம் வளரக்கூடிய முட்கள் உள்ள குறுமர வகையைச் சார்ந்தது. இம்மரத்தின் பட்டை, வேர், இலைக் கொழுந்து ஆகியவை மருத்துவ குணங்கள் நிறைந்தவை என்றாலும், இதன் பழங்களை அதிகளவில் மனிதர்கள் உட்கொள்கிறார்கள் / பயன்படுத்துகிறார்கள்.

இதன் பழங்கள் சற்று பெரிய கொட்டையுள்ள சிறு உருண்டை வடிவில் செம்பழுப்பு நிறத்தில் காணப்படும். நிறைவாற்றலை அதிகரிக்கும் குணமுடைய இப்பழங்களில் மாவு, புரதம், தாது உப்புகள், கால்சியம், பாஸ்பரஸ், இரும்பு ஆகிய சத்துக்கள் நிறைந்து உள்ளன. இப்பழத்தில் உள்ள சபோனின், ஆல்காய்டுகள் ரத்தத்தில் உள்ள நச்சுப் பொருட்களை வெளியேற்றி சுத்தப்படுத்துகிறது.

இப்பழங்கள் ஆண், பெண் இனப்பெருக்க மண்டலத்திற்கு ஊட்டம் தருவதனால் குழந்தைப்பேறு இல்லாதவர்களுக்கு அருமருந்தாகும். உடல் சூட்டை தணித்து குளிர்ச்சியை தரக்கூடியது. உடலில் உள்ள சர்க்கரை அளவை மாறுபாடு செய்வதனால் இவற்றைஅளவோடு எடுத்துக் கொள்வது நலம் பயக்கும்.

இலந்தை பழங்கள் காப்புக்காடுகளில் அதிகம் விளைவதால் அங்குள்ள முயல், மான் போன்ற விலங்கினங்களுக்கு பிடித்தமான உணவாகிறது.

கிராமங்களில் இலந்தை பழத்தை உலர்த்தி கொட்டை நீக்கி, மிளகாய் வற்றல், வெல்லம், உப்பு, சிறிதளவு புளி ஆகியவற்றைசேர்த்து "இலந்தை வடை" தயாரித்து வைத்துக் கொள்வார்கள். இதை பயன்படுத்தி உணவிற்கு பச்சடியாக செய்தும், வெறுமனே வாயில் போட்டும் சாப்பிடுவார்கள். இன்றைக்கும் பல இடங்களில் இலந்தை வடை கடைகளில் கிடைக்கிறது.

பொதுவாக பருவ காலங்களில் விளையும் பழங்களை அவ்வப்போது உண்டு வந்தால், அவற்றின் பலன்களை முழுமையாகப் பெறலாம்.

சராசரியாக 80 கிலோ வரை பழங்கள் தரும் "இலந்தை" நமது மண்ணின் மிகப் பழமையான, பாரம்பரியமான மரமாகும். தமிழ் இலக்கியங்களில் "இரத்தி" என்று இவற்றை அழைக்கின்றனர். இதற்கு "இறலி" என்று மற்றொரு பெயரும் உண்டு. இலந்தை மரங்கள் பற்றிய குறிப்புகள், நற்றிணை, புறநானூறு ஆகிய சங்க இலக்கியங்களிலும் யஜுர் வேதம், சூத்ர நூல்கள், அர்த்த சாஸ்த்திரம், வட மொழிக் காப்பியங்கள், மருத்துவ நூல்கள் பலவற்றிலும் காணப்படுகின்றன.

தொடரும்...

**ஆதிரையன்.**

ஹரி ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:

**வேதபாரதி**

**யோகா வகுப்புகள்** (30 நிமிடங்கள்)

**வாரம் 2 நாட்கள் by Online**

செவ்வாய், வியாழன் – காலை 6.00 மணி
சனி, ஞாயிறு – காலை 6.00 மணி

ஆசிரியர் : யோகாச்சாரியார் **ஸ்ரீ J. சந்திரசேகர் ஜி**
திருச்சி

யோகாவில் இணைவோம் உடல் மனம் புத்துணர்ச்சி பெறுவோம்
தொடர்புக்கு :
**9443495950 / 9443453053**


Study Hotel Management
SOORYA INSTITUTE
of Management Studies
6 Months | 1 Year | 2 Year
Diploma Course
Join SIMS... Get Certified Now
3rd Main Road, Mahavir Nagar, Lawspet, Pondy-8.
92442 22285, 0413 2250610


11—ம் ஆண்டு
வேதபாரதி இதழுக்கு
வாழ்த்துக்கள்
044 2243 1673
94441 34843
S.L.T. HARDWARES
Dealers in :
❖ General Hardware
❖ Paints
❖ Sanitary Wares
#22, 2nd Street, Sarathy Nagar,
Velachery, Chennai - 600 042.

GSTIN : 33ATPPM4263K1ZA

Shri.K. Sivakumar
Smt. Mohanambal

வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்

Supreeme

FURNITURE



No.63/1, Colony Main Road,Crawford, Trichy - 620 012.
shriagencytrichy@yahoo.com

Cell : 95009 59777 / 96291 99445

GSTIN : 33ATPPM4263K1ZA

Shri.K. Sivakumar
Smt. Mohanambal

வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்

Dairy Day
ICE CREAM

SHRI AGENCY

No.63/1, Colony Main Road,Crawford, Trichy - 620 012.
Pattamangalam Street, Mayiladuthurai.
shriagencytrichy@yahoo.com

Cell : 95009 59777 / 96291 99445


JSA
MANGALA BHARATHA DARSHAN
Sri Jagannath Puri
World Famous 13 th century's
"Konark Sun Temple"
Places Covered
• Bhuvaneshwar
• Puri
• Konark Sun Temple
• Skhanadagiri&
• Udaigiri Caves
• Nandan kannan Zoo
• Jajpur Sakthi Peetam
• Ram Mandir
• Chandrabhaga Beach
COST INCLUDES
• 3 STAR HOTEL WITH BREAKFAST
• A.C VEHICLE
₹17200
Book Now
JSA
Since 2000
Jai Shri Aaradhana Tours
Shop #2 #36,hirukural street, Anna Nagar,
Hasthinapuram, Chrompet, Chennai-600044
9941133505/9840651441
Starts On
11.11.2024
4 Nights &
5 Days


Best Wishes to
VEDABHARATHI
SSRC
Sri Sai Ram Construction
For your dream solutions
PROUD
BNI
MEMBER
Er. S. Sivanesan, B.Tech.,
1st Floor, N.B.S. Tower, John Selvaraj Nagar,
Kumbakonam, Thanjavur Dist.,
Tamilnadu, India - 612 001.
srisairamconstructionkum@gmail.com
Cell : 97864 24186

ARUL Residency

A/C Rooms

- Arul Residency has rooms with air conditioning and a private bathroom in Pondicherry.
- This 2-star hotel offers room service, a 24-hour front desk and free WiFi. The hotel has family rooms.
- Rooms contain a desk
- A flat-screen TV
- A private bathroom
- Bed linen and towels
- The rooms have a closet.



**Most popular facilities**

- Free parking
- Free Wifi
- Family rooms
- Room service








73, Thiruvalluvar Salai, Pillaithotam, Pondicherry - 13
✆ : 8124440395 / 94433 40395 | arulresidency73@gmail.com

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

MEMBER CORPORATE CLUB FOR AGENTS
2020 - 2021

# N. VENKATARAMANI

**Agency Code No.0077573S**
**Member of the Corporate Club for Agents**

*அவசர காலத்தில் கை கொடுக்கும் நண்பன் முதுமையில் பிறர் கை நாடா வாழ்ந்திட உதவும் உறவு.*

## LIFE INSURANCE CORPORATION OF INDIA

Off : 8, ECR Main Road, Near Kokku Park,
Pondicherry - 605 008.
Res : 64, Ambalathadayar Madam,
Pondicherry - 605 001.

**Tel : (R) 0413 - 2226533**
**Cell : 98945 67381**
**buzzvenkat@gmail.com**



NANDHAN
Financial Planners

Rtn. Y.G. GOPIDASS, FchFP.,
Cell : 94431 16307

DIGITAL PROPERTY

Security
Liquidity
Yield
Family Protection

⇛ Life Time Rent
⇛ Return of Purchase Price
⇛ No Stamp - Duty
⇛ No Maintenance
⇛ No Natural Calamity Issues
⇛ No Litigation Issues

General Insurance
Health Insurance
Life Insurance
Mutual Funds

100%
Tax Free
&
Tension Free
Income

SERVICE :
- Life Insurance
- Health Insurance
- Motor Insurance
- Mutual Funds
- Chits

NANDHAN
Financial Planners

No.41, Thirunarayanapuram East,
Kumbakonam - 612 001.

LIC
भारतीय जीवन बीमा निगम
LIFE INSURANCE CORPORATION OF INDIA

STAR Health Insurance
Personal & Caring
The Health Insurance Specialist

Chola MS
RISK SERVICES

**Prop. S. PALPANDI**
Ph : 0413 - 2349991, 2962991

***வேதபாரதிக்கு வாழ்த்துக்கள்***

PV

# PUDUVAI VACCINES

*Wholesale Dealer's in Vaccines, Hormones, Immunoglobulin & Life Saving Medicines*

**உற்றான் அளவும் பிணியளவும் காலமும்**
**கற்றான் கருதிச் செயல்.** (குறள் 949)

பொருள் : மருத்துவத்தைக் கற்றறிந்தவன், நோயாளியின் சக்தியையும், நோயின் தன்மையையும், காலத்தின் இயல்பையும், நன்கு கருதிப் பார்த்தே சிகிச்சை செய்ய வேண்டும்.

No.135, Ground Floor, Eswaran Koil Street,
Puducherry - 605 001.
E-mail : puduvaivaccines@gmail.com
Website : www.puduvaivaccines.com
Mobile : 86087 04000 / 99403 18170 / 90920 62228

உ

ஹர ஹர சங்கர ! ஜய ஜய சங்கர!





**ஸ்ரீ காஞ்சி மஹா பெரியவரால் 1972ல் தோற்றுவிக்கப்பட்டு பொன் விழா கண்டு ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி சங்கராச்சார்ய மும்மூர்த்திகளின் அருளாசியுடன் இயங்கிவரும்**

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடத்தின் சமய, கலாச்சார, பண்பாட்டு, சேவை அமைப்பான

# இந்து சமய மன்றத்தின் சார்பில்

கீழ்கண்ட சேவைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

- **ஆன்மிக நெறிகளை வளர்த்தல், சனாதன தர்மத்தை போதித்தல்**
- **பழந்திருக்கோயில் புனருத்தாரணம், உழவாரப்பணி, தீபம் ஏற்ற எண்ணெய் வழங்குதல்**
- **உலக நலனிற்காக கூட்டு பிரார்த்தனை, பூஜைகள், வேள்விகள், ஸ்ரீமந் நாராயணீய பாராயண யக்ஞம் நடத்துதல்**
- **இளஞ்சிறார்களுக்கு சமயபோதனை வகுப்புகள்**
- **நோயுற்றவர்களுக்காக கூட்டு பிரார்த்தனை**
- **மகளிருக்கு சமய அறிவை போதித்தல், திருவிளக்கு பூஜை**
- **திருமுறை, திவ்யப்ரபந்த பாசுரங்களை பரவச் செய்தல்**
- **மாணவ, மாணவியருக்கு நீதிநெறி வகுப்புகள்**
- **கிராமப் புனருத்தாரணம், இயற்கை பேரிடர்களில் உதவுதல் பழங்குடி மக்கள் மேம்பாடு, பழங்குடி பெண்கள் கல்வி முன்னேற்றத்திற்கு உதவுதல்**
- **ஆசிரியர்களுக்கு புத்தாக்க பயிற்சி முகாம்கள்**
- **பிடி அரிசித் திட்டம், அன்னதானம்**
- **சமய நீதி நெறி, தமிழ் இலக்கிய புத்தகங்கள் வெளியீடு**

**குருவருட்பணியில் இணைவீர்**

புலவர். **க.ஆத்ரேய சுந்தரராமன்** - 97890 07401

ஸ்ரீமதி. **கௌரி வெங்கட்ராமன்** - 90805 88620

முனைவர். **கலை. இராம. வெங்கடேசன்** - 94434 85177

**website : www.hindusamayamanram.in**

## அனுஷ அமிர்தம்

பழங்குடி மக்கள் வசிக்கும் பகுதியில் மாதந்தோறும் ஸ்ரீ மகா பெரியவர் அவதரித்த அனுஷ நட்சத்திரத்தன்று அனுஷ அமிர்தம் அமைப்பின் சார்பில் அன்னதானம் வழங்கப்படுகிறது.

**தொடர்பிற்கு : க.இராமச்சந்திரன்,செல்: 8667332933**


# ANATHA PRETHA KAINKARYA TRUST
# அநாத ப்ரேத கைங்கர்ய ட்ரஸ்ட்

Communication Address : S. SREEDHAR, 32, Ground Floor, Raja Nagar, 1st Main Road, Neelangarai, Chennai - 600 115.

Mobile : +91-9500005772, +91-9840243592, +91-9445378071

Email : dharmaa.apkt@gmail.com Website : www.dharmaa.org

## ஸ்ரீ காஞ்சி
## மஹா ஸ்வாமிகளின் அருளுரை
## தெய்வத்தின் குரல் 3ம் பாகம்
## அநாதைப் பிரேத ஸம்ஸ்காரம்
## இது தான் அச்வமேதம்



இதுவரை அச்வமேதத்துக்கு ஸமமான பலனைத் தருகிற ஒரு பணியைச் சொல்லவில்லை. மற்ற எல்லாவற்றையும் விட உயர்ந்ததான அந்தப் பணி என்னவென்றால், அதுதான் அநாதைப் ப்ரேத ஸம்ஸ்காரம்

**அநாத ப்ரேத ஸம்ஸ்காராத்**
**அச்வமேத பலம் லபேத்**

என்பது சாஸ்த்ர வசனம்


பர - உபகாரமாக, செத்துப் போன இன்னொரு ஜீவனுக்கு இதனால் உதவி பண்ணும் போதே, நமக்குப் பாபம் வராமல், கடமையைச் செய்து, நமக்கு உபகாரம் பண்ணிக் கொள்கிறோம்.

**இந்த அறக்கட்டளையின் நோக்கம்**

1. அநாத ப்ரேத ஸம்ஸ்காரம்
2. கர்த்தா ஏழையாக இருந்தால் அவர் செய்கின்ற தகன காரியங்களுக்கு உதவி செய்தல்.
3. நீத்தார் கடன், அந்த்யேஷ்டி இவைகளை குறித்து தர்மப்ரசாரம் செய்தல், பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல்.
4. மருத்துவமனையில் பல மாதங்களாக கிடக்கும் ப்ரேதங்களை அரசு அல்லது நீதிமன்ற உத்தரவு பெற்று உரிய ஸம்ஸ்காரம் செய்தல்

**Contributions can be sent to :**
**A/c Name : Anatha Pretha Kainkarya Trust**
**Bank Name : Canara Bank, T.Nagar Branch**
**SB A/c No : 0917101048526 / IFSC Code : CNRB0000917**

**Cheques should be sent to the communication Address listed on top of this page. The donors are requested to send an email to dharmaa.apkt@gmail.com with full details of transfer, Address, email and contact Number.**


CITY UNION BANK
CUB
City Union Bank introduces
" Voice Biometric Authentication"
in CUB All in One Mobile Banking App
in Association with
KAIZEN VOIZ
simple-seamless-secure
IDRBT
Explore, Enable, Excel
VOICE
BIOMETRIC
"Your voice is your password"

RNI No. : TNTAM/2016/73726 REGD No. : TN/CC(S)DN/571/24-26

Date of Publication First Week of Every Month
Licenced to Post without Pre Payment - TN/PM G (CCR) / WPP 605/24-26
Posted at Patrika Chennai, Egmore.
Posted between 1 - 7th October 2024

மரம் வளர்ப்போம் இயற்கையை காப்போம்



நம் தலைமுறை நம்மை போற்றட்டும்

தரமான நகைகளுக்கு
சரியான முகவரி ++++
சூர்யா ஜுவல்லர்ஸ்®
287, 288, புளியமரச்சந்து, ஈஸ்வரன் கோவில் வீதி, திருப்பூர் - 4. போன் : 0421 2241829
97862 41829 www.suryajewellers.co.in

To

If not delivered please return to
**VEDABHARATHI**
No.31, Seshadripuram 1st Main Road, Baby Nagar, Velachery, Chennai-42.